# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, ஆனி 2 உ (16-6-74) ஞாயிறு ஜூன் 16 ஜ:அவ்: 24 புத்தகம் 27 இதழ் 42


## புதிய புறநானூறு படைத்த வீரத் தாய்!

"தமிழ் சமுதாயத்துக்காக எனது வீர மகனை நான் களபலியாக தந்து எனது கடமையை நிறைவேற்றிவிட்டேன். அதிலே நான் பெருமையுமடைகிறேன். இதே போல ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் வீட்டுக்கொரு பிள்ளையை தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு தயங்காமல் ஒப்படையுங்கள்!"


—இவ்வாறு மாவீரன் சிவகுமாரனைப் பெற்றெடுத்த வீரத் தாய் தமக்கு தேறுதல்கூற வந்தவர்களைப் பார்த்து உணர்ச்சி பொங்கக்கூறினாராம். மெய்சிலிர்க்க வைத்திடும் இச்செய்தி புறநானூற்று வீரப் பரம்பரை இன்னும் அற்றுப் போகவில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறதல்லவா?

## சிவகுமாரன் படம்

மாவீரன் சிவகுமாரனின் புகைப்படம் ஒன்று அடுத்த இதழ் சுதந்திரனுடன் வழங்கப்படும். அதிகப் பிரதிவேண்டுவோர் உடன் சுதந்திரன் நிர்வாகியுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

# 'மீண்டும் பிறப்பேன் விடுதலைக்கு போரிடுவேன்'

"நான் மீண்டும் மீண்டும் இந்த மண்ணில் தமிழனாகவே பிறப்பேன். எந்த இலட்சியத்துக்காக இந்தப் பிறவியில் போராடி வந்தேனோ — அந்த இலட்சியங்களை ஈடேற்றுவதற்காக அடுத்த பிறவி (5ம் பக்கம் பார்க்க)



தமிழர் விட்டுப் பிள்ளை சிவகுமாரன்!

# சிவகுமாரன் வீரமரணம் அடைந்த இடத்தில் நினைவுச் சின்னம்!

தமிழ் ஈழ மண்ணின் விடுதலைப்போராட்டத்தில் தன்னுயிரையே அர்ப்பணித்த மாவீரன் சிவகுமாரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படவேண்டும் என்ற கருத்து பொதுமக்கள் மத்தியிலும் இளைஞரிடையேயும் வளர்ந்துள்ளது:

ஈழத்தமிழர் வரலாற்றிலேயே இதுவரை காணாத வீரத்திருமகனை சிவகுமாரன்—எந்த இடத்தில் பொலிசாருடன் போராடி இறுதியில் அவர்களிடம் மண்டியிட மறுத்து தனக்குத் தானே நஞ்சருந்திக் கொண்டு தன்னைத்தான் அர்ப்பணித்தானோ— அந்த இடத்திலேயே அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படவேண்டும் என்று பொது மக்கள் கருதுகின்றனர்.

சிவகுமாரனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் இந்த அபிப்பிராயமே காணப்பட்டது.

# 'அஞ்சாநெஞ்சன்' சிவகுமாரனுக்கு தமிழ் சமுதாயத்தின் இறுதி அஞ்சலி!

## நெஞ்சைப் பிழியவைத்த இறுதி ஊர்வலக் காட்சி!

தமிழ்ச் சமுதாயத்தின் மாவீரன் சிவகுமாரனின் இறுதிச் சடங்குகளில் 50,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும், இளைஞர்களும் யுவதிகளும், மாணவ மாணவியரும்—கலந்துகொண்டு கண்ணீரும் கம்பலையுமாகத் தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

சிவகுமாரனின் 4 மைல் நீளமான இறுதியாத்திரைக் காட்சி பார்த்தோர் நெஞ்சைப் பிழியுவைக்கும் காட்சியாக அமைந்திருந்தது:

சுடுகாட்டில், தலைவர்கள் ஆற்றிய இரங்கலுரையின் பின்னர்—சந்தனக்கட்டை தன்னைத் தானே அழித்துக் கொண்டு மற்றவர்களுக்கு மணம் கொடுப்பது போல—தமிழினத்துக்காக தன்னையே ஈந்தசிவகுமாரனின் சடலம் சந்தனக் கட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்டசிதையின் மீது தகனம் செய்யப்பட்ட போது "ஐயோ" என்று எழுந்த அழுகை யொலிவானை முட்டி மோதி எதிரொலித்து அனைவரையும் துயர வெள்ளத்தில் மூழ்கடித்தது.

பொலிசாரால் தீண்ட முடியாமற் போன அந்தத் தூயதியாக மேனியை அக்கினி தேவன் அன்புடன் ஆரத் தழுவிக்கொண்டான்.

(5-ம் பக்கம் பார்க்க)

ஒரு தமிழன்
தமிழர்க்காய்
உயிர் வாழ்கின்றான்
உயிர்வாழ்வோன்
தமிழர்க்கே
தனை ஈகின்றான்!

—பாரதிதாசன்.

## யார் அந்த இருவர்?

இலங்கை வங்கியில் எழுதுவினைஞர் பதவிகளுக்கு அண்மையில் ஏறத்தாழ நூறு பேர் தெரிவு செய்யப்பட்டுளர்: இவர்களில் ஆக இருவர் மட்டுமே தமிழராம்; இந்த இருவரில் ஒருவர் அரசாங்கத்துக்கு வால் பிடிக்கும் தமிழ் பா. உ. ஒருவரின் மகன். மற்றவர் குறித்த பா. உ. வின் உறவினராம்!

## காசியைவிடுதலைசெய்யக்கோரி மன்னாரில் உண்ணுவிரதம்!

கடந்த இரண்டாண்டு காலமாக விசாரணையோ விடுதலையோ இன்றி சிறை வைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனையும் ஏனைய தமிழ் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அல்லது அவர்கள் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப் படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த 9-6-74 அன்று மன்னார் இளைஞர்கள் ஒரு நாள் (5-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்குக்கு இரும்புத் திரை!

## இந்திய யாத்திரிகர்கள் செல்ல அனுமதி மறுப்பு!

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் நுழைவதற்கு சமய யாத்திரை மேற்கொண்டு தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் யாத்திரிகர்களுக்கு இலங்கை அரசு தடைவிதித்து வருவதாக அறியப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இரும்புத் திரைபோடும் முயற்சியில இலங்கை அரசு இறங்கியுள்ளதா என்று அவர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

அண்மையில் இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து 87 இந்து யாத்திரிகர்கள் ஈழம் வந்து ஈழத்தின் பல்வேறு ஸ்தலங்களுக்கும் யாத்திரை செய்தனர்; ஆனல் அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆலயங்களுக்கும் மற்றும் புனித இடங்களுக்கும் செல்ல முடியாது ஏமாற்றத்துடன் தாயகம் திரும்பினர்.

இதற்கு காரணம் அவர்களுக்கு இலங்கைத் தூதரகம் வழங்கியிருந்த விசாவில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு செல்வதற்கு அனுமதியில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். இதனால் அவர்கள் இவ்விரு மாகாணங்களுக்கும் செல்ல முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

பொதுவுடமை நாடுகளில் கூட சமய ஸ்தலங்களுக்கு செல்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஈழத்தில் மட்டும் தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு நாம் செல்ல (8ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

## தன்மானத் தமிழ் எழுத்தாளர்களே, உஷார்!

# திடீர் தமிழ் - சிங்கள எழுத்தாளர் ஒருமைப்பாட்டு மாநாட்டின் உள்நோக்கம் என்ன?

## மூக்கறுபட்ட முற்போக்குகளின் 'முடுமந்திர' திட்டம்!

'முற்போக்கு எழுத்தாளர்' என்று தம்மை வர்ணித்துக்கொள்ளும் கோஷ்டியினர் சிங்கள — தமிழ் ஒருமைப்பாடு மாநாடு நடத்தப் போவதாக அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டு வருகின்றனர்.

அதைவிட முக்கியமான சங்கதி என்னவென்றால் அவர்கள் இந்த மாநாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க 12 அம்சத் திட்டமொன்றை அளிக்கப் போகிறார்களாம்!

அப்படியானால் இது நாள் வரை மொழிப்பிரச்சினையை தாம் தீர்த்துக் கட்டி விட்டதாக குமாரசூரியரும் அவரது சவடால் அமைப்பாளர்களும் அழுது வந்தது பொய் என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? பிரதமரின்மகன் அனுரா யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி சென்று வந்து தாயாருடன் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க மாநாடு கூட்டியது எல்லாம் வெறும் புருடா என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

யாழ்ப்பாணம்-கொழும்பு இரவு மெயிலில் வைத்தே தமிழர் பிரச்சினையை ஒரு அலங்கார 'ரூபன்' தீர்த்து விட்டதாக 'சோத்தி மரம்' அண்மையில் வாந்தி எடுத்ததும் வெறும் 'கப்ஸா' தானே'?

குமாரசூரியரால் தீர்க்க முடியாதமொழிப் பிரச்சினையை, அனுராவால் அலங்கார 'ரூபனால் தீர்க்க முடியாத மொழிப்பிரச்சினையை, சுதந்திரக் கட்சியினர் என்று தமிழ் பகுதியில் தம்மை வர்ணித்துக்கொள்ளும் சவடால்களாலும், அருளம்பலங்களாலும், தியாகராசாக்களாலும், ராசன் செல்வநாயகங்களாலும் தீர்க்க முடியாத மொழிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இப்போது எழுதாத எழுத்தாளரான 'ஞானசூனியமும்' அவரது பரிவாரங்களுமா வந்துவிட்டனர்!

இலக்கிய உலகில் இனிச் செய்வதற்கு எதுவும் பாக்கி இல்லை என்ற எழுதிக்கிழித்து விட்ட வயிற்றுப் போக்கு 'ஞானசூனியம்' இப்போது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வந்துவிட்டதா?

### ஒரு வெற்றி

ஆனால் ஒரு விதத்தில் மகிழ்ச்சியடைகிறோம் —தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காணப்பட்டு விட்டது; புதிய அரசியல் சட்டம் தமிழரது உரிமைகளை யெல்லாம் வழங்கிவிட்டது; என்றெல்லாம் கூறித்திரிந்தவர்கள் — இப்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்பதை முதன் முதலாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது தமிழர் கூட்டணி நடத்திவரும் இயக்கத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும். தமிழர் கூட்டணி மட்டும் இல்லையானால், தமிழருக்கு பிரச்சினை இருப்பதே தெரியாமல், தமிழினத்துக்கு சமாதி கட்டப் பட்டிருக்கும்; அதற்கு இந்த 'முற்போக்குகள்' கல்லெடுத்துக் கொடுத்திருப்பார்கள்!

### லெனின் கூறியது இப்போதுதான் தெரிகிறது.

அது மட்டுமல்ல — இது நாள் வரை தமிழ், தமிழினம் தமிழ் நாடு என்று பேசும் நம்மைப் பார்த்து வகுப்புவாதிகள், இனவெறியர் என்றெல்லாம் கூறிவந்தவர்கள் — இப்போதுதான், மாமேதை லெனின் தனது மொழியையும் இனத்தையும் நேசித்தவர் என்றும், அதனால் தமிழ் மொழியையும்,இனத்தையும்,முற்போக்குகள் என்று முத்திரை குத்திக் கொண்டுள்ளதாமும் நேசிப்பதில் தவறில்லையென்றும் முதன்முதலாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்: தன் மொழியையும் இனத்தையும் நேசிப்பது வகுப்புவாதமல்ல என்ற உண்மை பரிதாபத்துக்குரிய முற்போக்குகளுக்கு இப்போதாவது தெரியவந்தது பாராட்டுக்குரியதுதான்!

சிங்கள — தமிழ் எழுத்தாளர் மாநாடு பற்றிய சில உண்மைகளை இங்கே அம்பலப்படுத்தி ஆகவேண்டும்.

### ஏட்டிக்குப் போட்டி

இந்த மாநாடு உருவெடுத்தது எப்படி?

அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு அண்மையில் தமிழ் ஈழத்தில் நடைபெற்றபோது அதைத் தடுக்கவும், குழப்பிக் குழி பறிக்கவும் இந்த முற்போக்குகள் மேற்கொண்ட தில்லுமுல்லுகளை நாடறியும். இந்த மாநாட்டைக் கண்டித்துக் கூட முற்போக்கு 'ஞானசூனியம்' அறிக்கை விட்டது:

மக்கள் கலை, மக்கள் இலக்கியம், மக்கள் எழுத்தாளர் என்றெல்லாம் வாய் வீச்சுக் காட்டும் இவர்களிடமிருந்து மக்கள் எவ்வளவு தூரம் பிரிந்து சென்றுவிட்டார்கள் என்பதை தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்றாகத் திரண்டெழுந்து தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி இவர்களுக்கு நிரூபித்துவிட்டனர்.

மாநாட்டை 'பிரமாண்டமான' முறையில் நடத்தப் போகிறார்களாம். தமிழாராய்ச்சி மாநாடு முடிந்ததும் முடியாததுமாக 'அகில உலக எழுத்தாளர் மாநாடு' நடத்த வேண்டுமென்று 'ஞானசூனியம்' முற்போக்குகளுக்கு திட்டம் எடுத்துக் கொடுத்ததாம்: அப்போது தமிழாராய்ச்சி மாநாட்டுத் தியாகிகளின் அஸ்தி கூடக் கரைக்கப்படவில்லையாம்:

இப்படி ஏட்டிக்குப் போட்டியாகப் புறப்பட்டால் தமிழ் மக்கள் உலக எழுத்தாளர் மாநாட்டுக்கு ஒத்துழைப்புத்தராமல் நல்ல அடி கொடுத்தே தீருவார்கள் என்று ஏனைய முற்போக்குகள் இதற்கு மறுத்துவிட்டனவாம். இதைத் தொடர்ந்துதான் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக' ஒரு சிங்கள-தமிழ் எழுத்தாளர் ஒற்றுமை மாநாட்டை முற்போக்கு 'ஞானசூனியம்' ஒழுங்கு செய்ததாம்.

சிங்கள-தமிழ் எழுத்தாளர் மாநாடு என்று டாம்பீகமாக பெயர் சூட்டப்பட்டிருந்தாலும் இந்த மாநாட்டுத் தயாரிப்பு வேலைகளில் சிங்கள எழுத்தாளர் எதுவித பங்கும் எடுக்கவில்லை. அக்கறையும் காட்டவில்லை:

தேசிய ஒற்றுமை என்றால், ஒருமைப்பாடு என்றால் அதற்கான அழைப்பு பெரும்பான்மை இனத்திடம் இருந்தே முதலில் வரவேண்டும். அப்போதுதான் உண்மையான தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட முடியும்.

ஆனால், இங்கே நடப்பதென்ன?

தமது சங்கத்தின் 20வது ஆண்டு விழாவைக்கொண்டாட சில அடிவருடித் தமிழர்கள், சிங்கள அரசுக்குப் பாதபூஜை செய்து தமது வயிற்றை நிரப்பலாம் என்ற எண்ணங்கொண்ட சில தமிழர்கள், சிங்கள— தமிழ் ஒருமைப்பாடு மாநாடு நடத்துகிறார்களாம். எழுத்தாளர்களைப் பாதிக்கும் பத்திரிகைத் தட்டுப்பாடு போன்ற பூதாகாரமான பிரச்சினைகளை புறக்கணித்துவிட்டுமொழிப் பிரச்சினை போன்ற அரசியல் பிரச்சினைகளை அபகரித்துக் கொண்டு கூத்தாடுவது எதற்காக? தென்னிந்திய சஞ்சிகை இறக்குமதி கட்டுப்பாட்டின் பலனை தினமும் அனுபவித்து வருகிறோம்' போதாதா? இந்த இலட்சணத்தில், தேசிய ஒருமைப்பாடு, அந்தோ, பரிதாபம்,

சிங்கள எழுத்தாளர்கள் நேசக்கரம் நீட்டவில்லை. ஆனால் இந்த அடிவருடிகள் அவர்களது கால்களை நக்கத் தயாராகிவிட்டார்கள். இத்தகைய ஈனத்தனமான தேசிய ஒற்றுமை—ஒருமைப்பாடு எமக்கு அவசியம் தானா?

சிங்கள இலக்கியங்களை எல்லாம் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரின் கீழ் தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்துள்ளார்கள். 'பெண்பிள்ளை பெத்து எழுத்தாளரானவர்' உட்பட இந்த முற்போக்குக் கோஷ்டியினர்; ஆனால் தமிழ் மக்களின் படைப்புகள் எத்தனை இதுவரை சிங்களத்தில் வந்துள்ளன? கூறமுடியுமா முற்போக்குகளால்? ஏன் அவ்வளவு தூரம் போகவேண்டும்? இந்தத் தமிழ் முற்போக்குகளின் படைப்புகளில் ஐந்தாவது சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்று தன்னும் இவர்களால் கூறமுடியுமா?

அப்படியிருக்க, சிங்கள அரசின் கால்களை நக்கி, தமது இனத்தை விலைபேசி விற்பதற்கு இன்னொரு பெயர்தான் தேசிய ஒருமைப்பாடா? இதற்கு விழா ஒரு கேடா?

### நோக்கம் என்ன?

இந்த மாநாட்டின் உண்மையான நோக்கம் என்ன? இதன் அறுவடையை உண்மையில் அனுபவிக்கப் போவது யார்?

இந்த விழாவை மும்முரமாக ஏற்பாடு செய்வதில் 'மொஸ்கோ சார்பு' என்று இற்றைவரை தன்னை வர்ணித்து வந்த ஒரு ஞானசூனியமும், ''சீன சார்பு'' என்று தன்னை வர்ணித்து வரும் ஒரு ''நரகாதிபதி'' கலாநிதியும் ஈடுபட்டுள்ளனராம். ஞான சூனியம் தனது குரு என்று கூறிக்கொள்ளும் அமைச்சர் பீட்டர் கெனமனிடமே இம்மாநாடு பற்றி பிரஸ்தாபிக்கவோ 'உத்தரவு' பெறவோ இல்லையாம்.

அதற்குப் பதிலாக 'நரகாதிபதி'க் கலாநிதியுடன் கூடி அடிக்கடி அரசின் புளியங்கொம்பான ''சீன சார்பு'' 'ரூபனிடம்' சென்று காவடி எடுத்து வருகிறதாம். மாநாட்டில் மொழிப் பிரச்சினை பற்றி சமர்பிக்கப்போகும் 12 அம்சத் திட்டத்தை அந்த 'ரூபனின்' கால்களில் வைத்து வணங்கி வேண்டிய வேண்டிய மாற்றங்களை எல்லாம் செய்துதரும்படி ஞானசூனியம் மண்டியிட்டதாம்: அலங்கார 'ரூபன்' திருத்திக் கொடுத்ததை மாநாட்டின் போது உருவாக்கி நிறைவேற்றுவது போல் நடித்துக் காட்டி, பின் அதையே அரசிடம் கொடுத்து நாடகமாடுவதுதான் திட்டமாம்.

இவ்வாறு மாநாடு நடத்தி அலங்கார 'ரூபனின்' மனதைக் குளிரப்பண்ணிவிட்டால், தான் வெகுநாளாக ஆசைப்பட்டுவந்த வானொலி இயக்குநர் பதவியோ அல்லது தினப்பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் பதவியோ தனக்குக் கிடைத்துவிடும் என்ற நப்பாசையில் 'ஞானசூனியம்' இரவு பகலாக இப்போது ஓடித்திரிகிறதாம். இப்பதவிகள் பெறுவதற்கு, வேண்டுமென்றால் அமைச்சர் கெனமனுக்கு 'டட்டா' காட்டிவிட்டு, சீன 'நாமம்' போடுவதற்கும் தயாரென்றும் ஞான சூனியம் அறிவித்துள்ளதாம்.

அமைச்சர் குமாரசூரியரைத் தன் சாகஸ நடிப்பால் மயக்கி, அவரைத் தனக்கு வேண்டியமட்டும பயன்படுத்திக் கொழுத்தபின் அவருக்கே குழிபறித்த 'நரகாதிபதி' கலாநிதி இப்போது தனது சாகஸங்களால் அலங்கார 'ரூபனை' மயக்கி வருகிறாராம். இதன் விளைவு தானும் அண்மையில் (அரசாங்க கஸட்டான நாளேடு ஒன்றில் தினமும் கடைசிப் பக்கத்தைக் கெடுத்து வரும்) 'சோத்தி மரத்துக்கு'க் கிடைக்கவிருந்த ஒரு பதவியை 'நரகாதிபதி' தட்டிக்கொண்டு போனது. அலங்கார 'ரூபன்' தனக்குத் தரவேண்டிய பதவியை ''நரகாதிபதி''க்கு கொடுத்து தனக்கு மூக்கறுத்து விட்டாரே என்று ''சோத்தி மரம்'' வெந்து புழுங்குவது ஒரு பக்கம் இருக்க, 'நரகாதிபதி'யின் ஆசைகளை இது மேலும் தூண்டிவிட்டுள்ளதாம்.

யாழ்ப்பாணத்திற்கும் பல்கலைக் கழகவளாகம் வந்தால் (?) அதற்குத் தானே தலைவராக வருவதற்கு இந்த மாநாட்டை நன்கு பயன்படுத்த வேண்டுமென்றும், அலங்கார ''ரூபன்'' மாநாட்டை நடத்துவதற்குப் பரிசாக தனக்கு அப்பதவியைத் தருவாரென்றும் 'நரகாதிபதி' நம்புகிறதாம்.

இதற்கிடையில் 'முற்போக்குகள்' சங்கத்தின் ஒரு பிரிவினர் தமக்கென ஒரு தனி 'புரட்சிகர சங்கம்' அமைக்க முயற்சி எடுத்து வருகிறார்களாம். இவர்

### 'ஊடுருவி'

இதனால் மூக்கறுபட்ட முற்போக்குகள் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் போட்டியாக சிங்கள-தமிழ் எழுத்தாளர்களது 'எழுத்தாளர்மாநாடு' ஒன்று திருகோணமலையில் வெகுவிரைவில் நடைபெறப் போகிறதாம். தமிழ் சிங்கள ''தமாஷா'' மாநாட்டுக்கு முன்னதாக இம்மாநாடு நடந்து முடிந்துவிடுமாம். இளந் தலைமுறையினரை பழைய முற்போக்குகள் எள்ளி நகையாடியும் அவமதித்தும் ஏகாதிபத்திய ஏஜண்டுகள் என்று வர்ணித்தும் வந்ததால் பெருந் தொகையான இளந் தலைமுறையினர் பழைய தலைமையை விட்டு விலகி புதிய சங்கம் அமைப்பார்களாம்:

இவ்வாறு புதுச்சங்கம் தோன்றினால் தமிழ் சிங்கள 'தமாஷா' மாநாடு நடக்குமா என்பதும் சந்தேகம் தான் என்று சொல்லப்படுகிறது.

---

## புலவர் இராசு வேண்டுகோள்!

ஈரோட்டு வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் ஈரோடு பெரியார் மன்றத்தில் கச்சதீவு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் போது கச்சதீவு தொடர்பான சான்றுகள், படங்கள், விளக்கப் படங்கள்' செய்திகள் காட்சியும் அமைக்கப்படவுளது.

இக்காட்சியில் வைப்பதற்காக கச்சதீவு பற்றி செய்தி கட்டுரை வெளிவந்த இலங்கை இதழ்கள் தேவைப்படுகின்றன என்றும் அவை தமக்கு அனுப்பிவைக்கப்படுமானால் காட்சியில் வைத்த பின்னர் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் புலவர் செ. இராசு அறிவிக்கிறார்.

அனுப்பவேண்டிய முகவரி புலவர் செ: இராசு, கச்சதீவு கருத்தரங்கு, 52 பிரப் ரோடு, ஈரோடு, தமிழ் நாடு இந்தியா.

---

உணர்ச்சிக்கவிஞர் சிறையில் இன்று

**இரண்டாண்டு 6 நாட்கள்!**

## அரசியல் மேடை

# நெஞ்சம் நிறைந்த தம்பி!

அன்பு நண்பா,

கண்களிலிருந்து கொட்டுகின்ற கண்ணீரை நிறுத்திட வழி தெரியவில்லை; சுக்கல் சுக்கலாக உடைந்து போய்விட்ட இதயத்தை மீண்டும் இயல்பான நிலைக்கு கொண்டு வரமுடியவில்லை; வாராது வந்துற்ற தியாகமாமணியை பறிகொடுத்துவிட்டோமென்கிற பதைப்பும் துடிப்பும் நெஞ்சை விட்டு நீங்கியபாடில்லை; உண்ணும் போதும் சரி, உறங்கும் போதும் வீரக்களை சொட்டும் அந்தச் சிரித்த முகமே என் நெஞ்சத்தில் நிழலாடுகிறது: எதுவுமே தோன்றாமல் பைத்தியம் பிடித்தவன்போல இருந்துவருகிறேன்—சென்ற பத்து நாட்களாக!

எனது நிலை மட்டுமல்ல—தமிழ் சமுதாயத்தின் விடுதலையிலும் உரிமை வாழ்விலும், அக்கறைகொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழனின் நிலையுமே இதுதான்! தங்கள் வீட்டுப் பிள்ளையை தமிழினத்தின் வீரமிக்க ஒரு காளையை—இழந்துவிட்ட பெரும் தவிப்பில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமுமே கதறித் துடித்து நிற்கிறது! தங்கள் உடன் பிறப்பை—உற்ற தோழனை—பறிகொடுத்த வேதனையில் துவண்டுபோய் நிற்கிறார்கள் தமிழ் இளைஞர்கள்; ஒவ்வொரு தமிழ்த் தாயும் தன்னுடைய சொந்த மகனை இழந்து போனதுபோன்ற துயரத்தில் மூழ்கிப்போயிருக்கிறாள்; என் போன்றோரோ யாருக்கும் அடங்காத—யாராலுமே கட்டுப்படுத்தமுடியாத — தங்கத் தம்பியொருவரை — தமிழ் ஈழத்தின் முன்னோடும் படை வீரர்களில் ஒருவரை — காலன் கையில் கொடுத்துவிட்டு கையறு நிலையில் கலங்கிநிற்கிறோம்; தமிழ் சமுதாயத்தின் வழிகாட்டிகளான தமிழர் கூட்டணித் தலைவர்களோ—தம்மால் ஏற்றுக்கொள்ளப்படாத பாதையில் சென்றவரேனும் தமிழ் சமுதாயத்தின் தன்னலமறுத்த ஓர் உண்மைத் தொண்டரை இழந்துவிட்டோமேயென்று கதிகலங்கி நிற்கிறார்கள்!!

ஆம் நண்பா, தம்பி சிவகுமாரன் தாமாகவே வலிந்து அணைத்துக்கொண்ட சாவு—நாம் யாருமே எதிர்பார்த்திராத நேரத்தில் பேரிடிபோல வந்து தமிழ் ஈழம் முழுவதையும் சென்றவாரம் துயர வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டது! தமிழ் சமுதாயத்துக்காக தமிழ்த்தாயின் திருவடிகளிலே தன்னுயிரையே காணிக்கையாக்கிவிட்ட சிவகுமாரனின் உச்சக்கட்டமான தியாகம், ஈழத் தமிழன் ஒவ்வொருவனையுமே அசைத்து விட்டிருக்கிறது!

சிவகுமாரனின் ஈடிணையற்ற மதிப்பிட முடியாத் தியாகம் — தமிழ் சமுதாயத்தின் விடுதலை உணர்வையும், எழுச்சியையும் உணர்ச்சியையும், உத்வேகத்தையும் மீண்டுமொருமுறை தட்டி யெழுப்பிவிட்டிருக்கிறது! நீறு பூத்த நெருப்பாக கிடந்த தமிழர் விடுதலை உணர்வு பீறிட்டுக்கிளம்பியிருக்கிறது — சிவகுமாரனின் உயிர்த்தியாகத்தினால்!

''உள்ள உயிர் ஒன்றுதான்; அது போகப் போவதும் ஒருதடவைதான்; காரால் மோதப்பட்டோ, ஜன்னிகண்டோ, சுலைகட்டியோ, வேறு நோய் வந்தோ அப்படிப் போகப் போகின்ற உயிரை — நாட்டு விடுதலைக்காக, தமிழ் இனத்தின் உரிமைக்காக — கொடுப்போம் தம்பி''—என்றார் பேரறிஞர் அண்ணா! அந்த அண்ணனின் வார்த்தைக்கு இலக்கணமாகி, தமிழ் ஈழத்துக்காக தன்னுயிரையே அர்ப்பணித்ததன் மூலம் — உயிர் எமக்கு வெல்லமல்ல—தமிழ் மண்ணின் உரிமைதான் பெரிது என்பதை எடுத்துக்காட்டி விட்டான் தம்பி சிவகுமாரன்!

''அடிமையாக வாழ்வதைக் காட்டிலும் சுட்டுக்கொல்லப்படுவதையே நான் பெரிதும் விரும்புவேன்'' என்று ஒரு தடவை நம் பெரியவர் தந்தை செல்வா அவர்கள் — தம்பி சிவகுமாரனோ, 'தரப்படுத்தல்' எனும் கொடிய பாரபட்சத்தின்கீழ் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி பாழடிக்கப்பட்டுவருவதை பார்த்துக் கொண்டிருப்பதைவிட—தமிழ் மொழியும், தமிழ் ஈழமும் சிங்கள ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமையாகி அல்லலுறுவதை கண்டுகொண்டிருப்பதைவிட—தன் வாழ்வையே முடித்துக்கொண்டு சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுப் பறந்துசென்றுவிட்டான்!

ஆம், தமிழ் ஈழத்தின் விடுதலை வரலாற்றிலேயே—தன்னுயிரை காணிக்கையாக தமிழ்த்தாயின் திருவடிகளில் தானாகவே ஒப்படைத்த முதலாவது தமிழ் மாவீரன் தம்பி சிவகுமாரன்தான்! பொழுதெலாம் எங்கள் தமிழைக் கொள்ளைகொண்டு போகவோ — நாங்கள் சாகவோ — அழுதுகொண்டிருப்பமோ நாங்கள் ஆண்பிள்ளைகள் அல்லமோ— உயிர் வெல்லமோ—என்று ஆர்ப்பரித்து எழுந்து—தமிழ் விடுதலைக்கு முன்னர் எங்கள் உயிர், வெல்லமல்ல—என்பதை நிரூபித்த முதலாவது தமிழ் வீரன் சிவகுமாரன்! மாற்றான் முன்னர் எந்தக் கட்டத்திலும் மண்டியிட மறுத்து—பழந்தமிழர் வீரத்துக்கு புதுமெருகூட்டி, தன்னுயிரை போர்க்களத்தில் தானே போக்கிக்கொண்டு வீரச்சாவை அணைத்துக்கொண்ட தமிழ் ஈழத்தின் முதல் வீரன் சிவகுமாரன்! இதனால்தான் சிவகுமாரன் தமிழர் நெஞ்சங்களில் எல்லாம் இன்று நீக்கமற நிறைந்து எழுச்சியை யூட்டிக்கொண்டிருக்கிறான்!

தன்னுடைய வாழ்வு முழுவதையும் தமிழ் சமுதாயத்துக்காக ஒப்படைத்தது மட்டுமல்ல—தன்னுடைய மரணத்திலும் தமிழ் சமுதாயத்துக்கு பேரெழுச்சியையும் உத்வேகத்தையும் ஊட்டிவிட்ட செயல்வீரன்தான் தம்பி சிவகுமாரன்!

ஆம் நண்பா—சிவகுமாரன் மறைந்து விட்டான்—தன்னுயிரைத் தமிழினத்துக்காக பரித்தியாகம் செய்து விட்டான் — என்பதை யறிந்ததும் தமிழ் ஈழம் முழுவதும் எழுந்த துயரத்தையும் துன்பத்தையும் எப்படி வர்ணிப்பேன்! 70 இலட்சம் தமிழர் கண்களும் இரத்தக் கண்ணீர் வடித்தன! 35 இலட்சம் தமிழ் இதயங்களும் விம்மி வெதும்பி வெடித்தன! யாருமே வேண்டுகோள் விடாமலே யாழ்ப்பாண குடா நாட்டிலுள்ள சிற்றூர் பேரூர், பட்டினங்கள், பட்டிதொட்டிகள் எங்கணும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன! கடைகள், கட்டிடங்கள் மீதெல்லாம் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டன. படமாளிகைகள் மூடப்பட்டன; பாடசாலைகள், கல்லூரிகளை பகிஷ்கரித்து மாணவர்கள் வெளியே வந்தனர். எங்கும் சோகம் கப்பியது — வேதனை முட்டியது!

சிவகுமாரனின் இறுதி ஊர்வலத்தில் வரலாறு காணாத அளவில் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் — இளைஞர்களும் முதியோரும், தாய்மாரும் மாணவரும் தமிழ் பெண்களும் கண்ணீருடனும் கம்பலையுடனும் கலந்துகொண்டு தங்கள் அஞ்சலியை அந்த வீரமைந்தனுக்குத்தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். தியாகி சிவகுமாரனைப் பெற்றெடுத்த உரும்பராய் மண்—விடுதலை வீரர்கள் பூஜிக்கும் புனித மண்ணாகிவிட்டது.

நண்பா, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இதயம் குமுறிக் கண்ணீர் வடித்தபடியே—சிவகுமாரனுக்கு இறுதி அஞ்சலி செலுத்திட இவ்வாறு திரண்டனர் என்றால் — இவர்கள் எல்லோருமே சிவகுமாரன் பின்பற்றியதாக கூறப்படும் மறப்போர் முறையை ஆதரிப்பவர்கள் அல்லர்; ஆனால் சிவகுமாரனின் உள்ளத்தூய்மைக்கும் வச்சிரநெஞ்சுக்கும், இனவிடுதலை இலட்சியத்துக்கும் தியாகத்துக்கும் அஞ்சலி செலுத்திடவே இவ்வாறு கூடியிருந்தனர்!

ஆம் நண்பா, நம்முடைய தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறியிருந்தது போல—நாம் முழுக்க முழுக்க அஹிம்சை வாதிகள்; வன்முறையை துளியும் அங்கீகரிக்காதவர்கள்; இன்றைய சூழ்நிலையில் மறப்போர் முறை தமிழ் சமுதாயத்துக்கு ஆக்கத்தைவிட அழிவையே உண்டாக்கும் என்று திட்டவட்டமாக கருதுபவர்கள். அப்படியிருந்தும், மறப்போர் முறையில் — வழியில் நம்பிக்கை கொண்டவர் என்று கருதப்படும் சிவகுமாரனைப் பாராட்டுகிறோம் என்றால் — அவர் பின்பற்றியதாகக் கூறப்படும் மறப்போர் முறையை—வழியைப் பாராட்டுகிறோம் என்று கிஞ்சிற்றும் அர்த்தமல்ல— அவரது ஈடிணையற்ற மாபெரும் தியாகம் ஒன்றுக்கே நாங்கள் தலைவணங்கி நிற்கிறோம்!

சிவகுமாரன் பின்பற்றியதாக கூறப்படும் வன்முறையை நாங்கள் நிராகரிக்கிறோம்; ஆனால் அவரது மதிப்பிடமுடியாத் தியாகத்துக்கு — தன் உயிரையே களபலியாக அர்ப்பணித்த கர்மவீரத்துக்கு — தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறோம்!

இதை ஏன் இங்கு நான் வலியுறுத்திச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால்—சிவகுமாரனுக்கு நாம் செலுத்துகின்ற இறுதி அஞ்சலியை வைத்துக்கொண்டு — வன்முறைக்கு—நாம் அதாவது தமிழர் கூட்டணியினர்-ஆதரவு அளிக்கிறோம் என்கிற தப்பான அபிப்பிராயத்தை அரசும், மாற்றாரும் — ஏன் நம்மவரும்கூட— கொண்டுவிடக்கூடாதே என்கிற காரணத்தினால் தான்!

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் போது — திலகர், வ. உ. சிதம்பரனார், பகத்சிங், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, சுபாஷ் சந்திரபோஸ், வாஞ்சிநாத ஐயர் போன்றோர் பின்பற்றிய வன்முறை வழிகளை மகாத்மா காந்தியடிகள் கொஞ்சம் கூட ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் அதே வேளையில் அவர்கள் நாட்டுக்காக, செய்த தியாகங்களை பாராட்டிடவும் அதற்கு தலைவணங்கிடவும் காந்தியடிகள் கொஞ்சம் கூட பின் நிற்கவில்லை. காந்தியடிகளின் அதே நிலையில் நின்றே — சிவகுமாரனின் வீரத்துக்கும் தியாகத்தக்கும் நாம் சிரந்தாழ்த்தி நிற்கிறோம்!

இருபத்திரண்டு வயது; இன்பமாகப் பொழுது போக்கிடவேண்டிய பருவம் — காதலியுடன் கைகோர்த்தபடி வருங் காலத்தைப்பற்றி இன்பக்கனவுகள் கண்கொண்டு — ஆடிப்பாடி உல்லாசமாக சினிமாவென்றும், கடற்கரையென்றும் பொழுதுபோக்கிடவேண்டிய தனது வாழ்வின் வசந்த காலத்தை—தமிழ் சமுதாயத்துக்காகவே தியாகம்செய்து—எங்கெங்கோ எப்படி எப்படி எல்லாமோ கரந்துறைந்து — பொலீசாரால் அடிக்கடி அடி உதைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாகி— சிறைவாழ்வை அனுபவித்து — இறுதியில் களபலியாக தன் உயிரையும் ஈந்திட்ட சிவகுமாரனின் உத்தமத் தியாகத்தை எண்ணி எண்ணிப்பார்த்துத்தான் நாம் கண்ணீர் சிந்தியபடி அவன் வீரத்துக்கு தலைவணங்கி நிற்கிறோம்!

சிவகுமாரனை உனக்கு எப்படித் தெரியும் என்று ஒருகேள்வியை வல்லூறுகள் என்மீது போடக்கூடும். சிவகுமாரனையும் என்னையும் சந்திக்க வைத்ததும் தமிழ்தான்! ஆம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின் போதுதான் நான் சிவகுமாரனைக் கண்டேன் — அதற்கு முன்னரும் நான் அவரைக்கண்டேனில்லை; அதற்குப் பின்னரும் கண்டேனில்லை!

தமிழ் மாநாட்டின்போது சிவகுமாரன் ஒரு தொண்டராகப் பணியாற்றினார்: அவரது சிரித்த முகமும் சுறு சுறுப்பும் என்னை மிகவும் கவர்ந்தன; வெளிநாட்டிலிருந்து வந்திருந்த தமிழறிஞர்களுக்கு வேண்

(6-ம் பக்கம் பார்க்க)

### திலகர் வழி!

''அரசியல் உலகியல் மக்களுக்கான வேலை. அது துறவிகளின் வேலை அல்ல; கோபத்தை அன்பால் வெல்ல வேண்டும் என்ற புத்தரின் கொள்கையை நான் ஏற்கவில்லை. கண்ணபெருமான் கீதையில் கூறுவதைப்போல — யார் என்னிடம் எப்படி நடந்து கொள்ளுகிறார்களோ அதன் படியே நான் அவர்களிடம் நடந்துகொள்வேன். கீதையின் இந்தக் கருத்தைத் தான் நான் ஏற்கிறேன்''

—லோகமான்ய பாலகெங்காதர திலகர்

## எண்ணம்

### அரசே காரணம்!

'வீரத்தமிழன்' என்று தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப்படும் பொன்னுத்துரை சிவகுமாரன் என்ற இளைஞர், தமிழ்த்தாயின் திருவடிகளிலே தன்னுயிரை களபலியாகத் தந்து - மயிர்க்கூச்சலிட வைக்கும் மாபெரும் தியாகத்தைப்புரிந்து - தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் அணையாஜோதியாக இடம் பெற்று விட்டார் என்பதற்கு அவரது இறுதிச் சடங்குகளின் போது இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக - தமிழ் ஈழமே இதுவரை கண்டிராத முறையில் இரு நாட்களாகத் திரண்ட மாபெரும் மக்கள் வெள்ளமே தக்க சான்றாகும்.

'வன்முறையாளர்' என்கிற முத்திரையை பொலிசார் சிவகுமாரன் மீது குத்தியிருந்தும், அது பற்றி கிஞ்சிற்றும் பொருட்படுத்தாமல், தமிழன் ஒவ்வொருவனுமே தன் வீட்டுப்பிள்ளையை பறிகொடுத்தது போல துயரவெள்ளத்தில் மூழ்கி, கதறித் துடித்த காட்சியை பொலீசாரே நிதர்சனமாகக் கண்டிருப்பார்கள்.

சிவகுமாரன் பின்பற்றியதாகக் கூறப்படும் மறவழியை தமிழ் மக்கள் ஏற்கிறார்களோ இல்லையோ - அவனது ஈடிணையற்ற தியாகத்தைக்கண்டு - ஒப்புவமையற்ற தியாகத்தை கண்டு - துணிவையும் வீரத்தையும் கேள்வியுற்று - தமிழர்கள் இன்று நெக்கி நெக்கி உருகி அவ்விளைஞனுக்கு வீர வணக்கம் செலுத்துகிறார்கள்!

'இந்த ஒரு சிவகுமாரன் போனாலசம் — தொடர்ந்து ஆயிரம் சிவகுமாரர்கள் தோன்றுவர்' என்று இளைஞர் சிவகுமாரன் தான் மரணத்தை தழுவிக்கொள்வதற்கு சில மணித்துளிகளுக்கு முன்புகூட கூறியதாக சொல்லப்படுகிறது.

அஹிம்சை வழியில் நம்பிக்கையிழந்து — அஹிம்சை தவிர்ந்த வேறு வழிகளில் நாட்டம் கொள்ளும் இன்னும் பல சிவகுமாரர்கள் தமிழ் சமுதாயத்தில் தோன்றக்கூடாது என்று நாம் விரும்பினாலும் — நாம் மட்டுமே விரும்பி அது நிறைவேறக்கூடிய காரியமல்ல என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது நமது கடமையாகும்!

இந்த நாட்டுத் தமிழ்மக்கள் தங்கள் இன, மொழி, நில, கலாசார, ஆட்சியுரிமைகளை, முற்றிலும் அஹிம்சையிலும் சாத்வீக வழியிலுமே நின்று போராடிவரும் தமிழர் கூட்டணியின் தலைமையின் கீழ் அமைதியான வழியில் மீட்டுக்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கையுடன் இருந்து வருகிறார்கள்.

ஆனால் அரசோ, தமிழ் மக்களின் அமைதியான அஹிம்சைப்போக்கினை—தமிழர் கூட்டணியின் சாத்வீக வழிமுறையிலான கிளர்ச்சிகளை—ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறது. தமிழ் சமுதாயத்தின் நீதி நியாயமான கோரிக்கைகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. தமிழ் சமுதாயத்தின் அஹிம்சைக் கிளர்ச்சிகளை, அவசரகாலச்சட்டவிதிகளையும், அடக்குமுறைகளையும் ஏவி நசுக்கிவிட்டு, தமிழ் மக்களை தொடர்ந்து ஏறிமிதித்து வருகிறது.

'தரப்படுத்தல்' எனும் பயங்கர இனப்பாரபட்சத் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களின் உயர்கல்வியும் எதிர்காலமும் கொடூரமான முறையில் பறிக்கப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் ஏராளமானோர் விசாரணையோ விடுதலையோ இன்றி சிறைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அடைத்து வைக்கப் பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர்: காங்கேசன்துறை தொகுதி இடைத்தேர்தலைக் கூட நடத்தாமல் கடந்த 20மாதங்களாக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசு பறித்து வருகிறது.

அது மட்டுமன்றி—சென்ற சனவரி 10ம் நாள்—எதுவித அரசியல் கலப்புமின்றி—தமிழ்மொழி, இலக்கியம் பற்றி நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் எதுவித காரணமுமின்றி—எதிர்பாராத முறையில் மிகவும் குரூரமான முறையில் பயங்கரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தை இன்னும் எவ்வளவு காலம் சென்றாலும் எவர்தான் மறக்கமுடியும்? இந்தக் குரூரவெறிச் செயல் பற்றி பகிரங்க விசாரணை நடத்தக்கூட அரசு தவறி விட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு கடைப்பிடித்து வரும் இத்தகைய அடக்கு முறைகளும், அட்டூழியங்களும்தான்—தமிழ் இளைஞர்கள் மத்தியிலே ஆத்திரத்தையும் கோபாவேசத்தையும் கிளப்பிவருகிறது; இதன் காரணமாக—நாம் விரும்பாவிட்டாலும் — அவர்கள் அஹிம்சை வழியை கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினால் என்ன என்று சிந்திக்கவாரம்பிக்கிறார்கள்.

தமிழ் இளைஞர்கள் மத்தியில் வன்முறைக்கருத்துக்கள் வளர்ந்து விடக் கூடாதென்பதில் தமிழர் கூட்டணி மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்து வருகிறது. ஆனாலும் - தமிழர் கூட்டணி எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தபோதிலும் - அரசாங்கம், தமிழ் மக்கள் சம்பந்தமாகப் பின்பற்றிவரும் கொடிய அட்டூழிய அடக்கு முறைகளே — சிற்சில சமயங்களில் தமிழ் இளைஞர்கள் அஹிம்சையில் நம்பிக்கை இழப்பதற்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றன.

எனவேதான் - தமிழர் கூட்டணியின் கட்டுப்பாட்டையும் மீறிக் கொண்டு-தமிழ் இளைஞர்கள் யாராவது அஹிம்சை தவிர்த்த-வேறு வழி முறைகளைப் பின்பற்றுவார்களாயின் - அது அரசு தமிழினத்துக்கு எதிராகப் பின்பற்றும் அடக்கு முறைக்கொள்கைகளின் எதிர் விளைவு என்றே நாம் கருதுகிறோம்!

மீண்டும் கூறுகிறோம் - அஹிம்சையில் நம்பிக்கையிழந்த ஆயிரம் ஆயிரம் சிவகுமாரர்கள் தமிழ் சமுதாயத்தில் தோன்றுவதை நாம் துளியும் விரும்ப மாட்டோம்! ஆனால் நாம் விரும்பாவிட்டாலும் — இந்நாட்டுத் தமிழர்களுக்கு எதிராக அரசின் கொடூரமான அடக்கு முறைகள் தொடர்ந்து இன்னும் அதிகரித்துக்கொண்டே போகுமானால் - அப்படிப்பட்ட ஆயிரமாயிரம் சிவகுமார்கள் தோன்றுவதை தமிழர் கூட்டணியினாலோ அரசாங்கத்தினாலோ வேறு யாராலுமோ தடுத்துவிடவும் முடியாது!

இந்த உண்மையை அரசு புரிந்துகொண்டு - புத்தி பூர்வமாக நிதானத்துடன் செயல்படும் என்று எதிர்பார்த்து - தன்னுயிரைத் தியாகப்பலிபீடத்தில் காணிக்கையாக்கிய வீரன் சிவகுமாரனுக்கு சிரந்தாழ்த்தி நம் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# தியாகத் திருவிளக்கு

## சிவகுமாரனின் வாழ்க்கை குறிப்பு

"தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்காக தூக்குமேடை ஏறிட நேரிடினும் தயங்கேன்" என முழங்கிய தமிழ் சமுதாயத்தின் வீரத்தலைவன் அமரர் வன்னிய சிங்கத்தின் இலட்சியக் கருத்துக்களுக்கு தொடக்க முதலே பூரண ஆதரவு தந்துவந்தவர்கள் கோப்பாய்த் தொகுதி மக்கள். இனவிடுதலை இலட்சியத்தில் தோய்ந்துள்ள வீர மறவர்களைக் கொண்டுள்ள தொகுதி கோப்பாய்த் தொகுதி. தமிழினத்தின் தன்மானம் காத்துவரும் கோப்பாய்த் தொகுதியே வீர இளைஞன் சிவகுமாரனையும் ஈன்று பெருமை பெற்றுவிட்டது.

ஆம், கோப்பாய்த் தொகுதியிலுள்ள உரும்பராய் கிராமமே சிவகுமாரனின் பிறந்த ஊராகும். சிவகுமாரனைப் பெற்றெடுத்ததால், அந்த ஊர் தமிழர் வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றுவிட்டது.

சிவகுமாரனைப் பெற்றெடுத்த வீரத்தாயின் பெயர் அன்னலட்சுமி. தந்தையார் சின்னத்தம்பி பொன்னுத்துரை: தந்தையார் ஆசிரியராகப் பணியாற்றியவர். இந்தத் தம்பதிகளுக்கு நாலாவது புத்திரனாக பிறந்தவர் சிவகுமாரன். வீட்டில் சிவகுமாரனை 'திரவியம்' என்று செல்லமாக அழைப்பதுண்டு சிவகுமார் எனும் அத்திரவியம், தமிழ் சமுதாயத்தின் கிடைக்காத திரவியமாகி, இன்று தன்னையே அர்ப்பணித்துவிட்டது.

சிவகுமாரன், 1950-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபத்தாறும் திகதி பிறந்தவர். 23 வயதுக்காளை. தனது ஆரம்பக்கல்வியை, தந்தையார் கற்பித்த உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் பெற்றுக்கொண்ட அவர், யாழ் இந்துக் கல்லூரியில் உயர் கல்வி பயின்று, க:பொ:த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தினார். பின்னர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று பொறியியல்துறை முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கு, சிறையிலிருந்தே தோற்றி, அதில் தேறினார்.

சிறையில் தொடர்ந்து இருந்தமையால், அவரால் இரண்டாம் ஆண்டுப் படிப்பைத் தொடரமுடியாமல் போய்விட்டது! பின்னர் மீனாட்சி வர்த்தகக் கல்வி நிலையத்தில் கல்வி பயின்று கணக்காளர் (இலண்டன்) 1-ம், 2-ம் தரப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

சிவகுமாரனுக்கு — சிவநேசன், சிவேந்திரன், டாக்டர் சிவபாலன், சிவராணி, சிவதாசன் (இங்கிலாந்து) சிவானந்தன், சிவசுப்பிரமணியம் (இங்கிலாந்து), அரியரத்தினம், சிவகுமாரி, சிவயோகம், ஆகிய சகோதர சகோதரிகள் இருக்கின்றனர். வவுனியா சிவசேகரம் பிள்ளை, ஜெயபாலன், சுன்னாகம் சண்முகம் கந்தையா, லீலாவதி, நேசரத்தினம், கமலாவதி, விக்னேஸ்வரி, தேவகி (இங்கிலாந்து) ஆகியோர் சிவகுமாரனின் மைத்துனர், மைத்துனிகளாவர்.

சிவகுமாரன் சிறு வயதிலிருந்தே பொது வாழ்வில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்: உரும்பராயில் தீண்டாமையை ஒழித்துக்கட்டுவதற்கு சமபந்தி போசனம் நடத்தியதும், ஆலயப் பிரவேசத்துக்கு முன்னின்றுழைத்து, அதில் வெற்றி கண்டதும், இவரது சமுதாயத் தொண்டுக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

மதுப்பழக்கம், சிகரெட் புகைத்தல் போன்ற கெட்ட பழக்கங்களை அறவே வெறுத்த சிவகுமாரன், பெரியார்களிடம் மரியாதை காட்டுதல், கட்டுப்பாடு போன்ற பண்புகளை கடைப்பிடித்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழன் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழ வேண்டும் என்றும் அதற்காக கடைசி மூச்சு வரை உழைப்பதே தனது கடமையென்றும் தனது பெற்றோரிடம் அடிக்கடி அவர் கூறுவதுண்டு.

அவரது இந்த இலட்சியப் பற்று காரணமாக இரு ஆண்டுகள்—ஒருதடவை 6 மாதங்களும், இன்னொரு தடவை ஒன்றரை ஆண்டும்— சிறை வாழ்வை அனுபவித்தவர்.

தமிழர்கள் தமிழிலேயே தம் கருமங்களை ஆற்ற வேண்டும் — தமிழிலேயே பேசவேண்டும் — என்பதும் அவருடைய இலட்சியம்.

தமிழ் சமுதாயத்தை காட்டிக் கொடுப்பவர்களையும், பொதுசனங்களை காரணமின்றி இம்சிப்பவர்களையும், ஏமாற்றுபவர்களையும் சிவகுமாரன் அறவே வெறுத்து வந்தார் என்றும், தமிழன் வீரத்துடன் தியாகத்துடன் தன்னை அர்ப்பணித்தால் மட்டுமே தமிழ் ஈழ மண்ணின் சுதந்திரத்தைப் பெற முடியும் என்று அவர் கூறிவந்ததாகவும், அவரது உறவினர்கள் கூறுகின்றனர். அவருடைய இந்த தியாக உள்ளத்துக்கு மக்கள் தலை வணங்குகிறார்கள் என்பதை அவருடைய இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம் எடுத்துக்காட்டி விட்டது.

4-வது அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் போது ஒரு தொண்டராக இருந்து, பொதுமக்களுக்கும் வெளிநாட்டறிஞர்களுக்கும் பெருந்தொண்டாற்றியவர்.

தரப்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு பறிக்கப்படும் அநீதியைக் கண்டு பொங்கி யெழுந்தவர்.

பொலிசாருடன் அவர் நடத்தியதாக கூறப்படும் இறுதிப் போராட்டத்தின் பின்னர், யாழ் ஆஸ்பத்திரியில் 14-ம் வார்டில் அனுமதிக்கப்பட்டு, இறக்கும் தறுவாயிலும் கையில் விலங்கு பூட்டப்பட்டு— வாசல்படி ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு பொலிசார் கையில் ஆயுதம் தாங்கியபடி காத்து நிற்க—ஒரு வீரனாகவே அவர் மரணத்தை தழுவிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

"நோய் நொடியால்
மாண்டவர்கள்
கோடி கோடி
நூற்றிலொரு
பெயர்தானும்
ஏட்டில் இல்லை
தாய் நாடு வாழ்கவென
மடிந்த வீரர்
சரித்திரத்தில்
பொன்னெழுத்தாய்
நிலைத்து நிற்பர்"

அதுமட்டுமன்றி—தன் சகோதரிக்குப் பிறக்கப் போகும் பிள்ளையிடம் தனது படத்தைக்காட்டி, இதோ பாரடா உன் மாமன் - இவனைப்போல நீ வீரனாகவேண்டும்! என்று கூறி அவனை வீரனாக வளர்க்கவேண்டுமென்றும் தனது தாயாரிடம் கேட்டுக்கொண்டாராம்.

இது தமிழ் மண்மீது இறக்கும் தறுவாயிலும் அவர் கொண்டிருந்த அழியாக் காதலை எடுத்துக்காட்டுகிறதல்லவா?

---

காசியை விடுதலை செய்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணா விரதம் அனுட்டித்தனர்.

திரு: யோன்மார்க் அவர்களது இல்ல வளவில் நடைபெற்ற இந்த உண்ணா விரதம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. இந்த உண்ணா விரதம் ஆரம்பமாகுமுன்னர் மறைந்த மாவீரன் சிவகுமாரனின் ஆத்மசாந்திக்காக மௌனப் பிரார்த்தனையும் அனுட்டிக்கப்பட்டது. இந்த உண்ணா விரதத்தில் ஏராளமான தமிழ் இளைஞர்களும், மாணவரும் பங்கேற்றனர்.

காசி அண்ணனை விடுதலை செய், இருட்சிறைக்கோட்டத்துள் 2 ஆண்டுகள், 42 தமிழ் இளைஞர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய், என்பன போன்ற கோஷங்களைத் தாங்கிய அட்டைகள் உண்ணாவிரதிகள் இருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இறுதியில் திரு. யோன்மார்க் அவர்கள் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். திரு. யோன்மார்க், திரு. கறுப்பையாச்சாரியார் ஆகியோர் பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர். இறுதியில் தமிழ்த்தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

மன்னாரில் வைத்தே காசி ஆனந்தன் இரு ஆண்டுகளுக்கு முன் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

---

மீண்டும் பிறப்பேன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் போராடுவேன். தமிழ் இனத்தின் மீட்சிக்காக அடுத்த பிறவியிலும் என்னை ஒப்படைப்பேன்! எனவே யாரும் கவலையடைய வேண்டாம்!"

—இவ்வாறு மாவீரன் சிவகுமாரன் மரணப்படுக்கையில் வைத்து, தன் தாயாரிடம் கூறி கதறியழுது கொண்டிருந்த அவரைத்தேற்றியதாகதெரியவருகிறது.

---

## பத்திரிகையாளர் கேட்ட சோதிடம்!

முன்னாள் பகுத்தறிவாளரும், இந்நாள் சாயிபக்தரும், தற்போது வேலை இழந்திருப்பவருமான பத்திரிகையாளர் ஒருவர் தமது எதிர்காலத்தைப்பற்றி கேட்பதற்காக தெகிவளையிலுள்ள ஒரு சோதிடரிடம் சென்றாராம்.

சோதிடரிடம், இழந்துபோன வேலை மீண்டும் கிடைக்குமா? அல்லது அந்த வேலையுடன் சேர்த்து தான் பார்த்துவந்த "சைட்பிஸ்னெஸ்ஸை"யே கவனமெடுத்து தொடர்ந்து செய்யட்டுமா? என்று இந்தக் குறிப்பிட்ட பத்திரிகையாளர் கேட்டாராம்.

அதற்கு சோதிடர் கூறிய பதில் அவரைக் கிறுகிறுக்க வைத்திருக்கிறதாம். "இழந்தவேலை மீண்டும் உமக்குக் கிடைக்காது; எனவே 'சைட்பிஸ்னெஸ்ஸை'யே தொடர்ந்து செய்யப்பாரும் என்று சோதிடர் ஒரேயடியாகக் கூறிவிட்டாராம்"

# 'தரப்படுத்தல்' திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களுக்கு கொடூரமான பாரபட்சம்!

இன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தத பின்னர் — 1970ம் ஆண்டு முதல் பின்பற்றி வரும் இன, மொழி அடிப்படையிலான 'தரப்படுத்தல்' திட்டம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்பை எவ்வளவு தூரம் படிப்படியாகப் பறித்து வந்திருக்கிறது என்பதனை கீழ் வரும் அட்டவணை தெளிவாக விளக்குகிறது.

தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக கல்வியை மட்டுப்படுத்துவதும் கட்டுப்படுத்துவதுமே 'தரப்படுத்தல்' திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்பதையும், அந்த நோக்கத்தை கடந்த 4 ஆண்டுகளாக அரசாங்கம் எவ்வளவு தூரம் 'வெற்றிகரமாக' நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதையும் இந்த அட்டவணை துல்லியமாக எடுத்து விளக்குகிறது.

பௌதிக விஞ்ஞானம் என்ற ஒரேயொரு துறையைத்தவிர ஏனைய துறைகளில் தமிழ் மாணவர்கள் எவ்வளவு மோசமாக அமுத்தறுக்கப்பட்டு வருகின்றனர் என்பதை இதோ காணுங்கள்.

வைத்தியம், பல் வைத்தியம், விவசாயம் பொறியியல் போன்ற துறைகளில் 1969ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்களின் தொகை—இந்த அரசு பதவிக்கு வந்து கடந்த 4 ஆண்டுகளுக்கிடையில் சரிபாதியாக வெட்டிக் குறைக்கப்பட்டுவிட்டது. தரப்படுத்தல், தரப்படுத்தல் என்று கல்வியமைச்சுவும் அரசும் மாரடிப்பதன் அந்தரங்க நோக்கமும் தரப்படுத்தலால் ஏற்பட்டுள்ள விளைவும் இப்போது புரிகிறதல்லவா? புரியாத மண்டைகளுக்கும் இது புரியுமா?

குறிப்பு:—மேலே கண்ட இந்த உண்மையை ஆளுங் கட்சி ஆதரவு ஏடான 'டைம்ஸ் ஆப் சிலோன்' ஏடே தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

| துறை | 1969ம் ஆண்டு | 1970 டிசம். | 1972 சனவரி | 1973 பெப். | 1974 மே |
|---|---|---|---|---|---|
| வைத்தியம் | 50% | 43.3% | 41.4% | 38% | 27.3% |
| பல் வைத்தியம் | 42.1% | 57.5% | 55.3% | 49% | 27.5% |
| விவசாயம் | 51.4% | 42.5% | 41.4% | 52.3% | 15.3% |
| விலங்கியல் விஞ்ஞானம் | 70.6% | 25. % | 37 % | 13.6% | விபரம் தெரியவில்லை |
| உயிரியல் | — | — | — | 15.1% | 13% |
| பௌதிக விஞ்ஞானம் | 28.4% | 29.6% | 30.1% | 35 % | 34.9% |
| கட்டடக் கலை | — | — | — | 16.7% | 23.7% |
| பொறியியல் | 48.3% | 42.2% | 36.3% | 26.6% | 28.5% |

## சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டம்

தமிழினத்துக்காக தன்னையே அர்ப்பணித்த சிவகுமாரனுக்கு வீர வணக்கம் செலுத்துமுகமாக அஞ்சலிக் கூட்டம் ஒன்றை பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர் 15-6-74ல் நடத்துகின்றனர். இக் கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோருட்பட பலர் பேசுகின்றனர்.

## 'அஞ்சா நெஞ்சாநெஞ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரன் சிவகுமாரனின் பூதவுடல் 6ம், 7ம்திகதிகளில் — இரு நாட்களாக இறுதி அஞ்சலிக்காக உரும்பராயிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தபோது—தமிழ் ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து அழுது அரற்றிக்கொண்டே உரும்பராய் நோக்கி பல்லாயிரம் மக்கள் ஓடோடி வந்து அவருக்கு தம் வீர வணக்கத்தையும் இறுதி அஞ்சலியையும் தெரிவித்தனர்.

அப்படியிருந்தும், அதற்கும் வாய்ப்புக் கிடைக்காமல் போனவர்கள் பல்லாயிரவர். 7-6-74 பிற்பகல் 2-15 மணியளவில் கூட சிவகுமாரனின் இறுதி ஊர்வலத்தை தொடங்க வாய்ப்பில்லாமல் அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் கூட்டம் அவரது வீட்டில் திரண்டு வந்து கொண்டேயிருந்தது. இதன் காரணமாக வேறு வழியின்றி, பாதையொன்றில் தடைபோட்டு பொதுமக்களை கட்டாயமாகத் தடுத்த பின்னரே — இறுதி ஊர்வலத்தை ஆரம்பிக்கமுடிந்தது.

'திரவியம், நீ எங்காவது செல்லும் போது உனக்கு நான் தடை விதித்தேனா? உன்னுடன் சிறைசெல்ல நானும் தயாராக இருந்தேனே! இவ்வளவு காலமும் உனது படங்களை வேட்டை நாய்களுக்கு பயந்து மறைத்து வைத்திருந்தோமே—இன்று முதல் உனது அந்த அழகிய படங்களை வெளி வெளியாக வைக்கிறேன்—ஆனால் நீ போய் விட்டாயே!' என்று பலவாறாகக் கூறிய படியே சிவகுமாரனின் வீரத்தாய் அழுதகாட்சி இதயத்தை பிய்த்தெறியச்செய்தது.

சிவகுமாரனின் பூதவுடல், தமிழர் கொடியான உதய சூரியன் கொடியினால் மூடப்பட்டிருந்தது.

சிவகுமாரனின் நெற்றியில் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் தம்மை விரல்களை கீறி அதிலிருந்து பிறிட்ட இரத்தத்தைக்கொண்டு வீரத்திலகம் இட்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.

சிவகுமாரனின் இறுதி ஊர்வலம் சென்றபாதையின் இருமருங்கிலும் பல்லாயிர மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு அந்த அன்பான வீரனுக்கு இறுதி மரியாதையை செலுத்தினர். ஏராளமானோர், மரம் தடிகளிலும் கட்டிடங்களிலும் வீட்டுக் கூரைகளிலும் ஏறி நின்று பார்த்தனர்.

மிகவும் கட்டுப்பாட்டுடன் நடைபெற்ற இந்த இறுதி ஊர்வலத்தில் இந்து சமய கட்டுப்பாட்டையே மீறி— ஆயிரக்கணக்கான தமிழ் பெண்களும் மாணவிகளும் கலந்து கொண்டு சுடுகாடு வரை வந்தது சிவகுமாரன் மீது தமிழ்த்தாய்க்குலம் வைத்திருந்த அளவிலா பாசத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது.

ஊர்வலத்தில் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம், கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை, சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம், சு. நடராசா க. துரைரத்தினம் பா. உ. கா. பொ. இரத்தினம் பா. உ., சி நாகராஜா, இ விசுவநாதன், திருமதி மங்கையர்க்கரசி ஆகியோருட்பட பல தலைவர்கள் சோகமே உருவாகக் கலந்துகொண்டனர்.

'வாழ்க ஈழத் தமிழகம்' எனும் தமிழ்த் தேசிய கீதமும் 'எங்கள் ஈழத் தமிழ் நாடு' எனும் எழுச்சிக் கீதமும், 'வீறுகொண்ட தமிழராய் வீரர் நாங்கள் கூடினோம் கூறுநூறு செய்யினும் குறையுமோ நம் இலட்சியம்' எனும் வாலிபர் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டும், மற்றும் இன எழுச்சி ஆர்ப்பாட்ட சுலோகங்களும் ஊர்வலத்தில்இசைக்கப்பட்டன. சிவகுமாரனின் விருப்பப்படி இறுதி ஊர்வலத்தின் போது பறை மேளம் அடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகுமாரன் சைவ மதத்தவராக இருந்த போதிலும், மதவேறுபாடின்றி அனைத்து மக்களாலும் அவர் நேசிக்கப்பட்டார் என்பதை எடுத்துக்காட்டும் வகையில்— அவரது இறுதி ஊர்வலம் உரும்பராயிலுள்ள கிறிஸ்தவ ஆலய வழியாகச் சென்றபோது அங்குள்ள ஆலயமணி அடிக்கப்பட்டது! அதே போல ஊர்வலத்தின்போது உரும்பராய் கத்தோலிக்கதேவாலயத்திலும் சிவகுமாரனின் பூதவுடல் தரித்துவைக்கப்பட்டு, இரு குருமார்கள் கடைசி ஆராதனையை நடத்தினர். மாணவிகள் துக்கப் பாட்டுப்பாடினர்.

உரும்பராய் — ஊரெழு பட்டின சபை அலுவலகத்தில் சிவகுமாரன் பூதவுடல் சுமார் 15 நிமிடங்கள் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சுடுகாட்டில்வைத்து—சிவகுமாரனின் பூதவுடலை இறுதியாக அனைவரும் வணங்குவதற்காக ஒருவாகனத்தில் அதை ஏற்றி வைத்திருந்தனர்.

முடிவில், தலைவர்கள் இரங்கல் உரை நிகழ்த்தினர் திருவாளர்கள் அமிர்தலிங்கம், கதிரவேற்பிள்ளை, வி. என். நவரத்தினம், புஷ்பராசா ஆகியோர் அங்கு உரையாற்றினர். ''கட்டுக்கடங்காத வீரமும் சொல்ல முடியாத துணிவும், மன உறுதியும் கொண்ட ஒரு மாவீரனை தமிழினம் இழந்துவிட்டது!'' என அவர்கள் தமது உரைகளின்போது குறிப்பிட்டனர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசும்போது விசித்து விசித்து அழத் தொடங்கி விட்டார்.

இறுதியாக சிவகுமாரனின் பூதவுடலை அக்னிதேவன் அரவணைத்துக்கொண்டான்.

தமிழ் சமுதாயத்துக்காக சந்தனக்கட்டைபோல தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அக்கர்ம வீரன் — சந்தனக்கட்டைகளுடன் சேர்ந்து பிடிசாம்பராகி தமிழ் ஈழமண்ணுடன் இரண்டறக்கலந்து கொண்ட போது அங்கு கூடிநின்ற பல்லாயிர மக்களின் இதயங்களும் வெடித்து, மக்கள் விம்மி விம்மி அழுத காட்சி சோகத்தின் உச்சக்கட்டக் காட்சியாகும்!

## தமிழ் மாணவிகளின் பெருந்துயரம்!

சிவ குமாரனின் மரணச் செய்தி தமிழ் மாணவர் மாணவியரை வெகுவாக உலுக்கிவிட்டது: வேம்படி மகளிர் கல்லூரி மேல் வகுப்பு மாணவிகள் சிவகுமாரனின் மரணச்செய்தியறிந்ததும் தாம் கட்டியிருந்த தமது கல்லூரி 'டை'யை பிறவழமாக மாற்றிக் கட்டிக்கொண்டார்கள்.

இறுதி ஊர்வலத்தில், இராமநாதன் கல்லூரி உரும்பராய் இந்துக்கல்லூரி: சைவ வித்தியாசாலை, சந்திரோதய வித்தியாசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் வெளியூர்களிலிருந்து திரண்டுவந்திருந்த மாணவரும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

சிவகுமாரன் மறைவையொட்டி யாழ் பரியோவான் கல்லூரி பரிசளிப்பு விழாவும் இரத்துசெய்யப்பட்டது.


சகல மக்களுக்கும் சகல மதத்தினருக்கும்

# இயேசுவே பதில்

கூட்டங்கள்

வவுனியா

● பாவத்திலிருந்து விடுதலை.
● தெய்வீக சுகம்.
● வாழ்க்கையில் மறுமலர்ச்சி.



உலகப் புகழ்பெற்ற சங்கை. ஜீ. ஒஸ்போன் அவர்கள்

● குருடர் பார்வையடைகிறார்கள்.
● செவிடர் கேட்கிறார்கள்.
● சப்பாணிகள் நடக்கிறார்கள். (மத். 11-5)

ஜூன் 15ந் திகதி முதல் 23ந் திகதி வரை வவுனியாவிலுள்ள யு.சி. மைதானத்தில் தினசரி மாலை 6.30க்கு நடைபெறும்.

இலவச உட்பிரவேசம்



அச்சகத்தாரே! அச்சம் வேண்டாம்!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்ற ஏக்கம் வேண்டாம்

இறக்குமதி அச்சுகளைவிட ஏற்றமிகு அச்சுகளை இங்கேயே வார்த்துக் கொடுக்கின்றோம்

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள் வார்த்துக் கொடுக்கப்படும்

றப்பர் ஸ்டாம்
புளக் } வேண்டுமா?

விபரங்களுக்கு:-
சுதந்திரன் அச்சு வார்ப்பகம்
194 ஏ, பண்டாரநாயக்கா விதி, கொழும்பு-12.
தொலைபேசி 23411.

## தமிழ் இளைஞர்களுக்கெதிராக அனுராதபுரம் சிறையில் நடந்த அக்கிரமங்கள்!

**அனுராதபுரம் சிறைச்சாலையில் வைத்து தமிழ் இளைஞர்கள் மிருகத்தனமாக தாக்கப் பட்ட சம்பவம் பற்றியும், அந்த இளைஞர்களின் உடமைகளை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிலர் பலாத்காரமாக பறித்துக்கொண்டதாக சொல்லப்படும் சம்பவம் பற்றியும் அரசாங்கம் ஒரு பூரண விசாரணையை நடத்த முன்வரவேண்டும் என்று பேரவையில் அண்மையில் பேசிய உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் கேட்டுக்கொண்டார்.**

## விசாரணை நடத்தப்படவேண்டுமென உடுவில் பா. உ. கோரிக்கை!

அவர் அப்போது பேசியதாவது:-

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சில தமிழ் இளைஞர்கள் அண்மையில் அனுராதபுரம் புதிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்கள். அனுராதபுரம் போனல், யாழ்ப்பாணத்திலிருக்கும் தமது உறவினர்கள் தம்மை வந்து பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று இந்த இளைஞர்கள் உள்ளூர மகிழ்ச்சியடைந்திருக்கலாம்.

ஆனல், இந்தத் தமிழ் இளைஞர்கள் அனுராதபுரம் சிறைக்குகொண்டு போகப்பட்டதும், அங்குள்ள ஜெயிலர்களும், ஏனைய குற்றவாளிகளும் இந்த தமிழர்களுக்கு அடிக்கவேண்டும் என்று தமக்குள் பேசிக்கொண்டார்களாம். துவேஷமான முறையில்—'கறுப்புக்கொடி காட்டுவதற்கு இது யாழ்ப்பாணமல்ல—அனுராதபுரம்' என்றெல்லாம் பயமுறுத்துகிற முறையில் கீழ்த்தரமாக பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள் இந்த ஜெயிலர்கள்.

இதைக்கேட்டுப் பயந்து தானே என்னவோ, அந்த தமிழ் இளைஞர்களில் நான்கு பேர் சிறையை விட்டு எப்படியோ ஓடிவிட்டார்கள். இவர்கள் ஓடியதைச் சாட்டாக வைத்துக்கொண்டு, ஏனைய தமிழ் இளைஞர்களை, காற்றுப் புகமுடியாத இருட்டறை ஒன்றினுள் அடைத்து வைத்துக் கொண்டு அங்குள்ள சிங்கள ஜெயிலர்கள் எல்லோருமாகச் சேர்ந்து தம் ஆசை தீருமட்டும் அடித்து உதைத்து துன்புறுத்தியிருக்கிறார்கள். இத்தாக்குதலின் போது தமிழ் இளைஞர்களுக்குள், மண்டை உடைந்தவர்களும் எலும்பு முறிந்தவர்களும், இரத்தக் காயங்கள் அடைந்தவர்களும் அனேகம். ஒரு இளைஞரது ஆண் உறுப்பிலும் மிலேச்சத்தனமாக தாக்கியிருக்கிறார்களாம்.

இதையடுத்து இந்த விஷயத்தை அவசரத்தந்தி மூலம் நான் மாண்பு மிகு நீதியமைச்சர், நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர், அனுராதபுரம் சிறைச்சாலை அதிபர் ஆகியோருடைய கவனத்துக்குகொண்டு வந்து, இந்த இளைஞர்களை சித்திரவதை செய்வதை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

இதன் பின்னர் இந்த இளைஞர்கள் உடனடியாக கண்டி சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கண்டியில் அனுராதபுரத் தாக்குதலின் போது காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலை கமிஷனரின் அனுமதியுடன், இந்த இளைஞர்கள் டிரான்சிஸ்டர் வானெலிப்பெட்டியை தம்முடம் வைத்திருந்தனர். ஆனல் இவர்கள் கண்டிக்கு மாற்றப் படுகையில், இவர்களிடமிருந்த அந்த வானெலிப்பெட்டியை அனுராதபுரம் சிறையிலுள்ள சப் ஜெயிலர் ஒருவர் பலாத்காரமாகப் பறித்து எடுத்துக் கொண்டுவிட்டாராம். இது இருப்பதாக இந்த இளைஞர்கள் தங்கியிருந்த 'வாட்'டுக்கு பொறுப்பாக இருந்த 'காட்' உறுதியளித்திருக்கிறாராம்.

எனவே இந்த சம்பவங்கள் பற்றி ஓர் பூரண விசாரணை நடத்த அமைச்சர் உடன் சம்பந்தமாக விசாரணை வருமானல் நாம் இதற்கு சாட்சியமளிக்கத் தயாராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்'

---

## தம்பி சிவா! எங்குற்ருய்?

(ஒரு புலம்பல்)

தியாகத்தின் திருவுருவே! தீரத்தின் உறைவிடமே! எங்கு சென்ருய்? ஏன் சென்ருய்? 'அகரா' என்றழைத்தே—அருந்தமிழ்ச் சுவை கூட்டி எக்காலும் நாமிங்கு தமிழராக வாழ்வோம் அன்றேல் மாள்வோம எனச் சூழுரைத்த உன்நாவும் அடங்கிற்ருே தம்பீ! தம்பி! நீ மாளவில்லை — மாளவில்லை முதியோர் — இளையோர் அனைவரது உள்ளத்திலும் நீ வாழ்கின்ருய்;

உன் உடல் கொழுந்திட்டு எரிந்திட்ட அந்தவேளையில் — எம் உள்ளத்தே உன் இலட்சியத்தீ கனன்று விட்டெரியத் தொடங்கிவிட்டது! அது இறுதிவரை மாளாது — மங்காது! எம் உடலில இறுதித்துளி இரத்தம் இருக்கும்வரையும் நம் இலட்சியம் அல்ல — உன் இலட்சியம். நீ காண விரும்பிய தமிழ்நாடு கண்டிடப் போராடுவோம்!

என்னரும் உடன்பிறப்பே! உறங்கிக்கிடந்த உள்ளங்களை உசுப்பிவிட்டது — தமிழராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியென்ருல்—மேலும் — நீ நின் உயிரைத் தந்து—அந்த உள்ளங்களைத் தீரங் கொள்ளச் செய்துவிட்டாய். நீ வன்முறையில் ஈடுபட்டதாகச் சந்தேகப்பட்டது அரசு! அந்தச் சந்தேகத்தின் பேரில்—உன்னைத் தேடிட — 200 காவல் நாய்களுக்கு மேலதிக தீனியோட்டு—உன்னைத் தேடிடவைத்த நிகழ்ச்சியை யார்தான் மறக்கமுடியும்? மேலதிக தீனி பெற்றிட்ட அந்தக் காவலர்கள் கூட மறந்திட மாட்டார்களே? ஏன்! உன்னுல்தானே அவர்கட்கு மேலதிக தீனி கிடைத்திட்டது!

உன் தலைக்கு விலை பேசினார்கள்! அந்த விலையைத் துரோகிகள் அபகரித்து உல்லாச வாழ்வு வாழ்ந்திடக் கூடாது என்பதனுல்தான் நீ காவல்காரர்களின் கைகளில் சிக்கியவுடன் மரண தேவனின் துணையை நாடினுயா? அல்ல-அல்ல-இரக்கமற்ற துரோகிகள் தாம் வாங்கும் — படிக்குரிய கூலியை—உன் பொன்னுடலில் விளையாடுவார்கள் என்றெண்ணித்தானே நீ மரணத்தைத் தழுவிக்கொண்டாய்? 'ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன் — இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பார்கள். அதேபோன்று—நீ இருந்தாலும் அரசின் காவலர்களுக்கு ஆயிரம் பொன் தான; நீ இறந்தும் அவர்கட்கு ஆயிரம் பொன்தான்!

உன்னை இழந்து நாம் துடியாய்த் துடிக்கின்ற இவ்வேளையில் உன்னைக் காட்டிக் கொடுத்திட்ட துரோகிகளின் உள்ளங்களும் நிம்மதியிழந்து துடித்திட வைக்கும் நின் செயல்! நீ மேற்கொண்டிட்ட இந்தச் செயலை எம்மைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் செய்தார்களேயானல் நாம் காண விருக்கும் தமிழ் நாட்டிற்கு சிறுசுணக்கமும் நமக்கு ஏற்படவே மாட்டாது. துரோகிகள் மத்தியில் வாழ விரும்பாதுதானே நீ சென்ருய்?

தம்பீ! சிவா! 'சிவா சிவா' என என் உள்ளம் கதறுகின்றது! ஆனல் நீயோ அக்கா 'வாசி வாசி' என்கின்ருய். ஆம்—தம்பீ! நான் வாசிக்கின்றேன்! தமிழை வாசிக்கின்றேன் — அதன் தோற்றத்தை வாசிக்கின்றேன்! அதன் ஆட்சியை மாட்சியை வாசிக்கின்றேன் — துரோகிகளால் அடைந்த வீழ்ச்சியை வாசிக்கின்றேன் — உள்ளம் குமுறுகின்றது—உடல் துடிக்கின்றது! மீண்டும் நம் முத்தமிழ் ஆள வேண்டும் என்பதனை வாசிக்கின்றேன் — அதன் மாட்சியைக் காண வேண்டும் என்பதனை வாசிக்கின்றேன்! நீ விட்டுச்சென்ற விடுதலைப் பணியை தொடர்ந்து வாசிக்கின்றேன்!

—கலைநிதி.

---

### நெஞ்சம் நிறைந்த தம்பி—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய உதவிகளையெல்லாம் ஓடியாடி அவர் செய்து கொடுத்த காட்சி இப்போதும் கூட பசுமையாக என் நினைவில் இருக்கிறது. அதுவும்—மாநாட்டின் இறுதிநாளன்று பொலீசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலின்போது சிக்கித் திதறுண்டு சின்னபின்னப்பட்டு பதறியோடிய வெளிநாட்டு அறிஞர்களையும் பெண்களையும், ஆண்களையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதில் தன் உயிரைத் திரணமாக கருதி, அவர் முன்னின்று ஆற்றிய பணியை யார்தான் மறந்திட முடியும்?

இந்திய விடுதலைப்போர் வரலாற்றில் வடநாட்டு பகத் சிங்கும் தமிழ் நாட்டு வாஞ்சிநாதனும் பிடித்திருக்கும் மகோன்னத இடத்தை தமிழ் ஈழ விடுதலைப் போர் வரலாற்றில் சிவகுமாரன் பிடித்தும் கொண்டுவிட்டார்! பலனைப் பற்றி சிந்திக்காமல் தனக்குச் சரியென்றுபட்ட பாதையில் அவர் சென்று, அதிலேயே தன்னையும் முழுவதாக அர்ப்பணித்துக் கொண்டுவிட்டார்! அதன் காரணமாக நம் நெஞ்சங்களிலே நிறைந்து நீங்கா இடத்தைப் பெற்றுவிட்டார் சிவகுமாரன்!

சென்ற கிழமை நான் எழுதியிருந்த மடலில் 1956 ஆனி ஐந்து — ஈழத் தமிழர் விடுதலைப் போர் தொடங்கிய நாள் என்று குறிப்பிட்டிருந்தேன் — இந்த ஆண்டு ஆனி ஐந்தும் நம் விடுதலைப் போர் வரலாற்றில் அழியா இடம் பெற வேண்டிய நாளாகிவிட்டது. ஆம், ஆனி ஐந்தில்தான் சிவகுமாரனும் வீரமரணத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருர்!

தன்னுடைய தலைவனும், தன்னைப் பின்பற்றுகின்ற தொண்டர்களும் கலங்கி கண்ணீர் வடித்து நிற்க வருகின்ற சாவு—ஒருவன் இரந்து என்ருலும் பெறவேண்டிய சாவு என்கிருன் வள்ளுவன். வள்ளுவன் கூறியபடியே—

தன்னலம் சிறிதுமில்லான்—
நெஞ்சுறுதி மிக்கோன்—
தமிழ் இனத்துக்காக தன்னை
அர்ப்பணித்தவன்—
உத்தமத் தொண்டன்—
உண்மைத்தியாகி—
மதிப்பிட முடியா மாவீரன்

என்றெல்லாம் தமிழ் சமுதாயத்தின் தலைவரான நாவலர் அமிர்தலிங்கம் கண்ணீர் வடித்தபடியே சிவகுமாரனின் கல்லறை மீது புகழ் மாலைகளை சூட்டிட — பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அந்த மாவீரனது தியாகத்தை எண்ணி கண்ணீர் வடித்திட—வள்ளுவன் சொன்ன அந்தவீரச்சாவை—களச்சாவை—வலிந்து சென்று அணைத்துக்கொண்டு—குறளுக்கு இலக்கியமாகி விட்டான் வீர இளைஞன் சிவகுமாரன்!

வீரத்தமிழ்மகன் சிவகுமாரனைபெற்றெடுத்த தந்தையும் தாயும் ஈழத் தமிழினத்தின் பெருமதிப்புக்குரியவர்கள்; வீர வணக்கத்துக்குரியவர்கள். சிவகுமாரனை பெற்றெடுத்த வீரத்தாயின புகழ் பாடிட நம்முடைய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் இன்றைக்கு வெளியே இல்லையே என்று கவலையடைகின்றேன்.

வீரன் சிவகுமாரன் மறைந்து விட்டான் என்று அவரது பெற்றோரும் மற்றோரும் கவலையடையவேண்டியதில்லை; ஏனெனில் தமிழ் மொழியையும் தமிழ் ஈழ மண்ணையும் தன் உயிர்போல நேசித்த அவர் மீண்டும் இங்கே பிறப்பார் என்கிற நம்பிக்கை எனக்கு மெத்த உண்டு. அந்த நம்பிக்கையுடன் நம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நாம் ஏற்றுக்கொண்டுள்ள புனிதமான கடமையிலீடுபடுவோம்!

எனவே நண்பா, சிவகுமார் பின்பற்றியதாககூறப்படும் மறப்போர் முறையை இப்போதைக்கு அறவே மறந்துவிட்டு அவர் காட்டிய வைராக்கியத்தில், உறுதியில், வீரத்தில், அஞ்சாநெஞ்சத்தில், தியாக மனப்பான்மையில் நூற்றில் ஒரு பங்கையாவது நம் இளைஞர்கள் பின்பற்றி, அறவழியில் தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு நம்மை நாமே அர்ப்பணித்திடவேண்டும்! அப்போதுதான் சிவகுமாரனின் உள்ளம் அமைதியடையும்! அவரது ஆத்மா சாந்தியடையும்!

ஆம், மீண்டும் கூறுவேன் — வன்முறையை நாம் நிராகரித்திடும் அதே வேளையில் உயிரைத் தமிழுக்கும் உடலை தமிழ் மண்ணுக்கும் ஈந்துவிட்ட மறத்தமிழ் மாவீரன் சிவகுமாரனின் ஈடிணையற்ற தியாகத்துக்கு தலை வணங்கி — விடுதலைப் பாதையில் விரைந்து முன்னேறுவோம்! பெறுவோம் தமிழ் ஈழம்!

அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---


## வியாபாரத்துக்கு அழகு விளம்பரம் செய்தல்

### அருள் விருந்து

''நல்வாழ்வு வாழ்பவன் நல்லுபதேசம் செய்பவனை விட மேலோன்.''

—— தர்மசக்கரம்.

15 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,**

த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.




# 19. வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கு யாழ்மாநகரில் சிலை எழும்புமா?

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பெருமையுடன் பாடினான் பாரதி அத்தகைய பெருமை மிகு வள்ளுவனுக்கும், அவன் வகுத்தளித்த திருக்குறளுக்கும் ஈழத்தில் ஆண்டு தோறும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன. வள்ளுவரது பெருமைபற்றி மேடைகள் தோறும் முழங்கப்படுகின்றன. ஆனாலும் திருவள்ளுவருக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் ஒன்று ஈழத்தில் எழுப்பப்பட வேண்டும் என்று யாரும் இதுவரை குரல் எழுப்பியதாக நாம் கேள்விப்படவுமில்லை; அத்துறையில் முயற்சியெடுக்கவுமில்லை இது மிகவும் வேதனைக்குரிய ஒரு நிலைதான்!

மனித சமுதாயத்துக்கு வாழ்க்கை நெறி வகுத்துத் தந்து — வள்ளுவம் எனும் ஒரு பெரும் தத்துவத்தை— சமதர்மதத்துவத்தை கார்ள் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின் போன்றோர் தோன்றுவதற்கு முன்னரே வகுத்தளித்த வள்ளுவனுக்கு ஈழத்தில் இதுவரை சிலையெழுப்பப்படாமலிருப்பது ஈழத் தமிழன் ஒவ்வொருவனும் வெட்கப்படவேண்டிய நிலைதான்!

வள்ளுவனுக்கு நினைவு முத்திரை வெளியிடப்படவேண்டும் — வள்ளுவனுக்கு சிலையெழுப்பப்பட வேண்டும்— என்று நாம் கூறினால்—தென்னிந்தியனுக்கு இங்கு எதற்காக சிலையெழுப்பவேண்டும் என்று 'முற்போக்கு' பேசும் சில மூளையற்ற மனிதர்கள் சீறியெழுந்திடக்கூடும்! இத்தகைய சில மனிதர்களுக்கு —வள்ளுவத்தின் அருமை பெருமைகள் கண்ணுக்குத் தெரியாது-வள்ளுவம் கூறும் சமதர்மத் தத்துவங்கள் செவிகளில் ஒருது — கார்ஸ் மார்க்சும், ஏஞ்சல்சும் லெனினும் சொன்னதுதான் வேத வாக்கு!

இதற்கு காரணம் நமக்குத் தெரியும்—வள்ளுவன் எந்த இனத்தில் பிறந்தானோ— அந்த தமிழினத்துக்கு இன்று தனக்கென ஒரு சொந்த நாடில்லை; வள்ளுவன் எந்த மொழியில் தன் திருக்குறளை எழுதினானோ அந்தமொழிக்கு இன்று அரசு கட்டில் இடமில்லை உலகவரை படத்தில் தமிழனுக்கு எனச் சொந்த நாடு தமிழ நாடு ஒன்று இருந்திருந்தால் — வள்ளுவனது தத்துவங்கள் ஐ. நா. சபையிலும் அகில உலகிலும் கேட்டிருக்கும். வள்ளுவத்தின் பெருமையை அகிலஉலகமும் உணர்ந்திருக்கும்; அதைப் பின்பற்றிடத் தொடங்கியுமிருக்கும் ஆனால் வள்ளுவர் நாடில்லா இனத்தில் பிறந்த காரணத்தினால் இன்றும் குடத்திலிட்ட விளக்காக இருந்து வருகிறார்.

இருந்தபோதிலும் வள்ளுவரது பெருமையை குறளின் அருமையை — இன்றைக்கு அகில உலகமும் மெல்ல மெல்ல உணர்ந்து வருகிறது. உலக மொழிகளில் எல்லாம் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுவருகின்றது.

திருக்குறள் உலகில் எந்தெந்த மொழிகளில் எவ்வெப்பொழுது மொழி பெயர்க்கப்பட்டன என்கின்ற உண்மையை உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கின்போது பண்டிதர் கா. பொ. இரத்தினம் படித்த கட்டுரை எடுத்து விளக்கியது

திருக்குறள் உலகெலாம் பரவிட வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ள பண்டிதர், இலத்தீன், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, போலிஷ், உருசியமொழி, சுவிடிஷ், சமஸ்கிருதம், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, வங்காளம் மராட்டியம், உருது, சிங்களம், பர்மிய மொழி, பியூஜித்தீவில் வழங்கும் கைவித்தியமொழி, சீனம், மலாய் குஜராத்தி போன்ற மொழிகளில் எல்லாம் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதை தமது கட்டுரையில் எடுத்துக் காட்டினார்.

பண்டிதர் தமது கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

'செக்கோசெலவிக்கிய தமிழ்ப் பேரறிஞர் கமில் சுவலபெல் அவர்கள் ஈராண்டுகளில் திருக்குறளைச் செக்கோசெலவக்கிய மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுவதாக 1962ல் தெல்லி மாநகரில் எனக்கு வாக்குத் தந்தார். வியத்நாம் மொழியில் விரைவில் மொழி பெயர்ப்பிப்பதாக சைகோனில் தமிழ் மறை பரப்பும் பெருந்தொண்டர் திரு. தெ. அழகப்பன் அவர்கள் கூறியுளர்.

யப்பான் மொழியில் மொழி பெயர்ப்பிக்க யப்பானிலுள்ள 'பண்பாட்டு வெளியீடு மாற்றுக் கழகத்தினருடன் தொடர்பு கொண்டுளேன். இலங்கையிலுள்ள சீனத்தூதருக்குத் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பைக் கொடுத்துச் சீன மொழியில் மொழி பெயர்ப்பிக்குமாறு 1959ல் ஒரு வேண்டுகோள் விடுத்தேன்: மொழிபெயர்ப்பு நிலைமையைத் தெரிவிக்குமாறு மீண்டும் 4-4-64ல் எழுதியுளேன்.

'பிறநாட்டறிஞர்களுடன் திருக்குறள் மொழி பெயர்ப்புக் குறித்து உரையாடும் போதும், கடிதத்தொடர்பு கொள்ளும்போதும், திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பினை அவர்கள் கேட்கிறார்கள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரதிகளை — வ: வே: சு: ஐயரின் ஆங்கில மொழி பெயர்ப்பினை— கொடுத்துள்ளேன். இப்பொழுது இது கிடைப்பதும் அருமை: எனவே திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் ஒன்று அவசியம் தேவை: தவத்திரு. தனிநாயக அடிகளார் இந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்பதே எனது ஆசையாகும்:

'திருக்குறளின் பெருமை பேசும் ஆங்கில நூல் ஒன்றும் வேண்டும் இதற்குரிய கட்டுரைகளை நான் சேர்த்துக் கொடுக்கத் தயாராக உள்ளேன். இதனை அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை வெளியிடலாம்.'

—இவ்வாறு தமது எண்ணங்களை வெளியிட்ட பண்டிதர் இரத்தினம் மாநாட்டுக் கருத்தரங்கில் வைத்தே யாழ்ப்பாண மாநகரில் திருவள்ளுவருக்கு சிலையெழுப்பப்பட வேண்டும் என்ற தமது ஆசையை வெளியிட்டார். இது பண்டிதர் ஒருவரது ஆசை மட்டுமல்ல ஈழத்தமிழ் மக்கள் எல்லோரதும் ஆசையும் எண்ணமும் இதுவேயாகும்.

வள்ளுவனுக்கு சிலை யாழ் நகரில் விரைவில் தோன்ற தமிழினம் ஆவன செய்யும் என்று எதிர்பார்ப்போம்!

●

முஸ்லிம்கள், மதத்தால் இஸ்லாமியராலும் இனத்தாலும், மொழியாலும் தமிழர்களே என்பதை உறுதிப்படுத்தும் முறையில், உலகத் தமிழ்மாநாட்டுக் கருத்தரங்கில் இரு முஸ்லிம் அறிஞர்கள் கலந்துகொண்டு கட்டுரை படித்தனர். ஒருவர் நம்முடைய நாட்டைச் சேர்ந்தவரும் வித்தியோதய பல்கலைக்கழக விரிவுரையாளருமான ஜனப் மொகமெட் உவைசு அவர்கள். மற்றவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் நயினு மொகமது அவர்கள்.

[பேராசியர் நயினு முகம்மது தமிழகத்திலிருந்து இங்கு வந்து தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு கட்டுரை படித்ததுபோல — அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவரும், இலங்கைப்பல் கலைக்கழகப் பேராதனை வளாக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் தமிழகத்தில் இப்போது நடைபெற்றுவரும் அனைத்துலக இஸ்லாமிய தமிழ் மாநாட்டிலும் கலந்து கொண்டு இஸ்லாமிய—தமிழ் உறவு பற்றி இரு கட்டுரைகள் படிக்கவும் இருந்தார். ஆனால் தமிழ் — முஸ்லிம் உறவு வளர்வதை விரும்பாததாலோ என்னமோ பேராசிரியர் வித்தியானந்தன் இந்தியா செல்வதற்கு அனுமதி வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. ஆனால் இந்திய அரசு இவ்விதமாக சின்னத்தனம் காட்டாத காரணத்தினால் பேராசிரியர் நயினு முகம்மது அவர்களால் இங்கு வர முடிந்தது]

ஜனப் உவைசு அவர்கள் தமது கட்டுரையில் இலங்கையில் முஸ்லிம்களிடையே பேசப்படும் பேச்சு வழக்குப் பற்றி ஆராய்ந்திருந்தார்.

ஜனப் உவைசியின் இக்கட்டுரையை யொட்டி நடைபெற்ற கருத்துரையாடலின் போது, அரசமொழி பெயர்ப்பாளரான திரு. க. நவசோதி பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

''ஈழத்து முஸ்லிம்களின் தமிழில் அரபு உர்து போன்ற சொற்கள் இடம் பெற்ற தென்றால் அது மத பண்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டதேயல்லாமல் சட்டத்தால் திணிக்கப்பட்டதல்ல;

''கட்டுரையாசிரியர் திரு. உவைஸ் அவர்கள் கொழும்பு வாழ் முஸ்லிம்களின் எண்ணற்ற பேச்சு வழக்கினையும் சிறப்புச் சொல்லாட்சிகளையும் குறிப்பிடவில்லை;

''உர்து அரபுச் செல்வாக்கால் 'ப'கர ஒலி முஸ்லிம்களிடம் சிறப்பிடம் பெறுகின்றது. வயிறு என்பதை பவுறு என்றும் விழுந்து என்பதை புளுந்து என்றும் வழங்குகிறார்கள்.

'பிடி என்பதை புடி என்றும் பிறகு என தமிழர் பேச்சுத் தமிழில் இடம் பெறுவதை பொறவு என்றும் வை என்பதை வெய் என்றும் சொன்னான், என்பதை சென்னான் என்றும் வழங்குகிறார்கள்: இருக்கு, இரு என்பதை முறையே சக்கு, இரிஎன்றும்முன், யார் என்பதை முறையே மின், தார் எனவும் ஒலிக்கின்றார்கள்.

''சிறப்புச் சொல்லாட்சிகளைப் பொறுத்தவரையில் ட்டு, அக்க, காட்டி, சிரிக்கு எனும் பதங்கள் முஸ்லிம்களின் பேச்சுத் தமிழில் எங்கிட்டு (எங்கு) அங்கனக்க (அங்கு) வரக்காட்டி (வரும் வரை) ஓடினகிரிக்கு (ஓடின உடன்) என்றவாறு பேச்சுத் தமிழில் அமைந்திருப்பது ஏனைய மாவட்டத் தமிழர்களின் பேச்சுத் தமிழில் இடம் பெறுததொன்றாகும்.''

— வளரும்


நான்காவது தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் ஜனப் உவைசின் கட்டுரையையொட்டி கருத்துரை வழங்குகிறார் திரு. க. நவசோதி.


வள்ளுவருக்கு சிலையமைக்கக் கோரிய பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

## வாழ்க நீ சிவகுமார்!

— யோ. பாலேஸ்வரன் —

வாழ்க நீ சிவகுமார்
தமிழ் நெஞ்சங்களிலெல்லாம்
தாழ் வுற்று நிற்கும் தமிழை
வாழ் விக்க எண்ணி
பாழ் பட்டுநிற்கும் தமிழர்களுக்கு
சுதந்திரதாகத்தை எழுப்பி — தமிழை
வாழ்விக்க வந்த வள்ளல்
நின்புகள் வாழ்க! வாழ்க!!

என்று தணியும் அந்நிய மொழியின் திணிப்பு
என்று பெறுவோம் தமிழ் அன்னை மொழியின் அணைப்பு
என்று கிடைக்கும் தமிழ் மொழிக்கு உரிமை
என்றும் அதை பெறுவது எம் கடமை
என்று, தவித்தது உன் உணர்வு
அதற்குள் அழைத்தது சாவு
அழைப்பு வந்ததோ தமிழ் அன்னையின் அடிசேரமறு
பிறப்பு வருமோ தமிழ் அன்னையின் மடிதாங்க
அமைதி பெறுகநின் ஆத்மா.

## உன் புகழ் வாழ்க!

— இரா. விஜயநாதன் —

ஒளிவிளக்கே! சங்கத்தமிழே!
தமிழ் பாடி வந்த தேனருவி நீ!
தமிழ்த்தாயின் தவப்புதல்வனே!
தமிழ்க்கடல் ஒளி முத்தே!
தமிழரின் தனிச் சொத்தே!
சிங்காரச் செந்தமிழா! வீரத் தோளா!
உனையீன்ற அன்னையவள் வீரத்தாய்
தமிழனென்னும் தகைமை கொண்டோய்
தோள்தட்டித் துணிந்து நின்றோய்
கோடையிடி போலதிர
கொட்டும் மாரியென
போர்முரசு ஆர்த்தது
வீரத் தமிழர் பொங்கினரென
ஆர்த்தெழுந்தோய் சிவகுமாரா!
திக்கெட்டும் தமிழ் முழக்கம்
தெருவெலாம் கூறி நின்றோய்
எம்முள்ளமதில் ஏறி விட்டோய்
உயிரைத் தமிழுக்குத் தந்தோய்
தமிழ் வெல்க! உன் புகழ் வாழ்க!!

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


இதுவே கடைசி வாரம்

சென்ரல் மருதானை 2,6,9-30 ராணி யாழ் நகர் 10.30,2 30,6.30,9.30

(சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.

இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்

ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா,

தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்

அன்புச்சகோதரர்கள்

(இலவச பாஸ்களிரத்து)

எமது அடுத்த வெளியீடு

எம். ஜி. ஆர், ஜெயலலிதா — நடித்த — 'ஒரு தாய் மக்கள்'


# சட்டக்கல்லூரி தமிழ்மன்ற விவகாரம்

சட்டக் கல்லூரித் தமிழ் மன்ற விவகாரம் மீண்டும் சந்திக்கு வந்திருக்கிறது. புரையோடிப்போன இவ் விவகாரத்தின் முன்னணி நடிகர்கள் வழக்கமான தில்லுமுல்லு பிரகிருதிகளே. இப் பிரகிருதிகளுக்கு இப்போது பதில் அதிபர் திரு. இரத்தினசபாபதியின் அனுசரணையும் கிடைத்திருக்கின்றதா? என்ற கேள்வி சட்ட மாணவர்களில் ஒரு பகுதியினரிடையே எழுந்துள்ளது.

தேர்தல் ஆட்சேபமனுவை விசாரிப்பதற்கு நீதிபதியாக அதிபர் திரு. குணசேகராவால் நியமிக்கப்பட்ட இவர், வழக்கு முடியுமுன்னரே அந்தப் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் நடாத்திய விருந்தில் பங்கு கொண்டமையும் அவர்களை ஆசீர்வதித்தமையும், அக் கூட்டத்தில் தமிழர் கட்சிகளைத் தாக்கிச் சில தற்குறிகள் பேசியமையும் அதற்கு திரு. இரத்தினசபாபதி தலையாட்டி மகிழ்ச்சி தெரிவித்தமையும் தற்செயலான நிகழ்ச்சிகளல்ல எனவும் திரு. இரத்தினசபாபதி இவ்வளவு நாளும் இம்மனுவை விசாரிக்க ஒழுங்குசெய்யாது இழுத்தடிப்பதும் தற்செயலானது அல்ல எனவும் சட்ட மாணவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இவ்விவகாரத்தின் முழு விபரங்களும் அதில் திரு. இரத்தினசபாபதியின் பங்கும் பின்னர் வெளிவரும்.

வடக்கு கிழக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாதென தடைவிதிக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன? தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு இழைக்கும் கொடுமையை நாம் அறிந்துவிடுவோம் என்பதனாலா? என்று அவர்கள் ஆத்திரத்துடன் குறைப்பட்டுக்கொண்டதாக தெரிகிறது.


7-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல்-பிளாசா

(கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ் நகர்)

திரைகளில்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா,

என். எம். நம்பியார்,

எஸ். ஏ. அசோகன்,

நாகேஷ், மனோரமா,

—நடித்த—



ராமன்தேடியசீதை

(ஈஸ்மன் கலர்)

சில தினங்கள் மட்டும்

கிங்ஸ்லி

சிவாஜி, ஜெயலலிதா,

—நடித்த—

எங்க மாமா

(கலர்)

வெள்ளி 21ம் திகதி முதல்

கிங்ஸ்லி பிளாஸா

லிடோ (யாழ்நகர்)

ஜெய்சங்கர்

கே. ஆர். விஜயா

—நடித்த—

வாயாடி

2-வது மாதம் செல்லமகால்

(கொட்டாஞ்சேனை)

வின்சர் (யாழ் நகர்)

புரட்சி நடிகர்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா

மனோகர், முத்தையா, நம்பியார், நாகேஷ்

மனோரமா, ராமசாமி, கீதாஞ்சலி, பாரதி

அன்னமிட்ட

கை

கெபிட்டல்

○ ஜெய்சங்கர்

○ வாணிஸ்ரீ

○ நாகேஷ்

○ ரமாபிரபா

○ வி. கே. ராமசாமி

— நடித்த —

குடும்பச் சித்திரம்

அவசரக்

கல்யாணம்


சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974-ம் வருடம் ஜூன் மாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.